இலவச பிரதி
Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்–12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை–02 | 17–11–2005 | வியாழக்கிழமை ஓசை–273

உலகில்
215 நாடுகளையும், 126 000 ஊழியர்களையும்,
99 000 க்கும் மேற்பட்ட முகவர்நிலையங்களையும்
தனது சேவையில் உள்ளடக்கிய
FedEx Express®
உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள உங்கள்
உறவுகளுக்கு கடிதங்கள், பொதிகள் மற்றும்
ஏனைய அன்பளிப்புப்பொருட்களை
துரிதமாகவும்,விரைவாகவும்,பாதுகாப்பாகவும்
உத்தரவாதத்துடன் அனுப்பும்
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 222 7835

# இராணுவ காவலரண்கள், ஈ.பி.டி.பி முகாம்கள் மீது குடாநாட்டில் பல இடங்களில் கைக்குண்டு வீச்சு!

## இரு தரப்பிலுமாக பலர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் நேற்றுப் பிற்பகல் முதல் இராணுவக் காவலரண்கள், ஈபிடிபி குழுவினரின் அலுவலகங்கள் வாக்குச்சாவடிகளுக்கு காவலுக்கு நிற்கும் படையினர் மீது கைக் குண்டு வீச்சுகளும், துப்பாக்கிச் சூடுகளும் இனந்தெரியதோரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் பல படையினரும், ஈபிடிபி குழு உறுப்பினர்களும் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிற்பகல் 2.30 மணியளவில் கச்சாய் வீதி இராணுவ நிலை மீது இடம்பெற்ற கைக்குண்டு வீச்சில் ஒரு சிப்பாய் காயமடைந்துள்ளார். 3.30 மணியளவில் மானிப்பாயிலுள்ள ஈபிடிபி. அலுவலகம் மீதும் சாவகச்சேரி ஈ.பி.டி.பி. அலுவலகம் மீதும் 5.00

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா தேர்தல் குறித்த நிலைப்பாட்டில் புலிகள் உறுதியாகவே உள்ளனர்

### ஊடகங்களில் வெளியான செய்திக்கு புலித்தேவன் மறுப்பு

விடுதலைப் புலிகள் தேர்தல் தொடர்பான தமது நிலைப்பாட்டில் இருந்து விலகி தமிழ் மக்களை தேர்தலில் வாக்களிக்குமாறு அறிவித்துள்ளனர் என கொழும்பிலிருந்து வெளியாகும் டெய்லி மிரர் ஆங்கில நாளேட்டில் வெளிவந்த செய்தி உண்மைக்குப் புறம்பானது என விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நெற் செய்திச் சேவைக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்காவில் 5ஆவது சனாதிபதித்தேர்தல் அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி

(கொழும்பு)

சிறிலங்காவின் ஐந்தாவது சனாதிபதித் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாட்டு நடவடிக்கைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது. தேர்தல் செயலகத்திலிருந்து வாக்குப் பெட்டிகள் அனைத்தும் முழுமையான பாதுகாப்புடன் வாக்களிப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. சாலைப்போக்குவரத்து நடைபெறும இடங்களுக்கு சிறிலங்கா போக்குவரத்து சபை பேருந்துகளிலும், தூர இடங்களுக்கு வான் வழியாகவும் வாக்குப் பெட்டிகள் கொண்டு செல்லப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வாக்களிப்பின் போது பாதுகாப்பு மிகப் பலப்படுத்தப் பட்டுள்ளதாகவும், மேலதிகமாக சுற்றுக்காவல் நடவடிக்கைகளும் இடம்பெறவுள்ளதாகவும் சிறிலங்கா பொலிஸ் வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

## சனாதிபதித்தேர்தல் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் கிடையாது

### தமிழ் தேசியக்கூட்டமைப்பு அறிவிப்பு

(திருமலை)

சனாதிபதித்தேர்தலின்போது தமிழ் மக்களின் நிலைப்பாடு எவ்வாறு அமையும் என்பது குறித்து, தமிழ்தேசியக்கூட்டமைப்பு விடுதலைப்புலிகள் இயக்கத்துடனான சந்திப்பின் பின் நவம்பர் பத்தாம் திகதி கிளிநொச்சியில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தெளிவாகத்தெரிவித்திருந்தது. அதில் எந்த வித மாற்றமுமில்லை.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. இருவேறு தாக்குதல்கள் ஐந்து படையினர் காயம்!

மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற இரு வேறு தாக்குதல்களில் இரு சிறிலங்காப் பொலிசார் உட்பட ஐந்து படையினர் காயமடைந்தனர்.

மட்டக்களப்பு இருதயபுரத்தில் நேற்று இரவு 8.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் மூன்று சிறிலங்காப்படையினர் படுகாயமடைந்தனர். மட்டக்களப்பு வைத்தியசாலையில் இவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை மட்டக்களப்பு மன்முனைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு கைக்குண்டுத் தாக்குதலில் இரு பொலிசார் காயமடைந்துள்ளனர்.

## பேரினவாதத்தின் தலைமைத்துவத்துக்கானதாகவே தமிழ் மக்களால் இத்தேர்தல் பார்க்கப்படுகிறது

### தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்

எங்களுடைய மக்களைப் பொறுத்தவரையில் சனாதிபதித் தேர்தல் தொடர்பாக எப்பொழுதுமே அக்கறையீனமாக, ஆர்வமற்ற நிலையையே தொடர்ச்சியாக வெளிப்படுத்தி இருக்கிறார்கள். ஏனெனில், சிறிலங்கா சனாதிபதித்தேர்தல் என்பது ஒட்டுமொத்தமாக சிங்களப் பேரினவாதத்தினுடைய தமிழ் மக்கள் மீதான ஒரு தலைமைத்துவத் துக்கான தேர்தலாகத்தான் பார்க்கப்பட்டு வந்துள்ளது என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கூறியுள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மாவீரர் நாளை எழுச்சியுடன் கடைப்பிடிக்க தீவிர ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

மாவீரர் தினத்தினை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிப்பதற்கான நடவடிக்கைகள் தற்பொழுது தமிழீழமெங்கும் முனைப்புடன் முன்னெடுக்கப்படுவதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

முன்னோடி நடவடிக்கையாக மாவீரர்களின் நினைவுகளைச் சித்தரிக்கும் பதாகைள் முக்கிய இடங்களில் கட்டப்பட்டு வருவதுடன் பிரதான வீதி எங்கிலும் மஞ்சள் சிவப்புக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு காட்சியளிப்பதனைக்காணக்கூடியதாகவுள்ளது.

(12ஆம் பக்கம்பார்க்க)

## ஊர்காவல் படையினர் மீது தாக்குதல் ஒருவர் பலி; மற்றொருவர் காயம்

பொலநறுவை மாவட்டம் அரலகங்விலவில் வீடு திரும்பிய சிறிலங்கா ஊர்காவலபடையினர் மீது அடையாளம் தெரியாத நபர்கள் நேற்று புதன் கிழமை காலை மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டார் மற்றொருவர் காயமடைந்தார்.சுசந்த பத்மகுமார என்பவர் கொல்லப்பட்டதாகவும், காயமடைந்தவர் ஹேரத் முதி

(12ஆம் பக்கம்பார்க்க)




## மாவீரர் நாள் நவம்பர் – 27

**''எமக்கு ஒரு நாடு வேண்டும் – எமது மக்களுக்கு விடுதலை வேண்டும் – எமது இனம் சுதந்திரமாக வாழ வேண்டும் – என்ற ஆக்ரோசமான இலட்சிய வேட்கையுடனேயே, மாவீரர்கள் களத்தில் விழுகிறார்கள்; எனவே எமது மாவீரர்கள் ஒவ்வொருவரது சாவும் எமது நாட்டின் விடுதலையை முரசறையும் வீரசுதந்திரப் பிரகடனமாகவே சம்பவிக்கின்றது.''**

தமிழீழ தேசியத்தலைவர்
மேதகு. வே.பிரபாகரன் அவர்கள்.

## யாழ். இல் தேர்தல் முகவர்கள் மூவரைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். வட்டுக்கோட்டைத் தொகுதியில் மகிந்தராஜபக்ஷ சார்பாக தேர்தல் முகவர்களாக நியமிக்கப்பட்ட மூன்று தொண்டர் ஆசிரியர்களைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. ஈ.பி.டி.பியினரின் வற்புறுத்தலுக்காக இக்கடமைக்குச் சென்றிருந்த இவர்கள் நேற்று மதியம் பன்னிரண்டு மணிக்கு உணவருந்தச் சென்றபின் காணாமற்போயுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

(33)

## வரிவிளம்பரம்

### செவ்வாய் வக்கிரமும் வியாழ மாற்றமும் எப்படி?

எங்கும் விற்பனையாகிறது. கிடைக குமிடம் சத்யா. ஆனைக்கோட்டை (0776547175) ருக்மணி - புத்த கசாலை, புதுக்குடியிருப்பு.(5398)

### தவறிவிட்டது

சுப்பிரமணியம் இராமையா ஜீவானந்தன் இல.723444314V அடையாள அட்டை ஓமந்தைக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் 28.10.2005 ஆம் திகதி பயணிகள் பேருந்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி பேருந்துப் பகுதி அலுவலகத்தில் ஒப்படைக்கவும். தகவல்:- இ.சிவானந்தன் (6926)

### தவறிவிட்டது

15.11.2005 அன்று நெடுங்கேணிக்கும் முல்லைத்தீவுக்கும் இடைப்பட்ட முல்லைத்தீவு வீதியில் இ.ஜெயகாந்தன் என்பவரின் கையடக்கத் தொலைபேசி (SIMENS - A60) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சேவா லங்கா மன்றம், நெடுங்கேணி அல்லது வவுனியா காரியாலயத்துடன் (024-2221354) தொடர்பு கொண்டு ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். தகவல், இ.ஜெயகாந்தன் (6927)

### விற்பனைக்குண்டு

உழவுச் சிற்றூர்தி குபாட்டா K700, பெட்டிக்கலப்பை சகிதமும் (புதியது) ஜன்மார்க் உழவுச் சிற்றூர்திப் பெட்டியுடன் (பழையது) விற்பனைக்குண்டு. தொடர்புக்கு பொ.சண்முகசுந்தரம் 106, கனகபுரம் - கிளி துயிலுமில்ல பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக. (6929)

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

கணனி அச்சுப்பதிப்புத் துறையில் புதிய நுட்பங்கள் உருவாக்கக் கூடியAdobePagemaker வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. தொடர்புகட்கு: வின்நெற் கணனி பயிற்சி நிலையம், டிப்போ வீதி, கிளிநொச்சி. (சி.13074)

### மாதாந்த சுகாதார மன்றம்

(அலுவலக செய்தியாளர்)

மாதாந்தம் நடைபெறும் சுகாதார மன்றம் எதிர்வரும் 21 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவை பணி மனையில் நடைபெறவுள்ளது.

மேற்படி நடைபெறவுள்ள சுகாதார மன்றத்திற்கு அனைத்து சுகாதார நிறுவனத்தலைவர்களையும் அரச சார்பற்ற நிறுவனத் தலைவர்களையும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி வேண்டுகை விடுத்துள்ளார். (சோ)

# விடுதலைப்புலிகளின் இராணுவ பலமே யுத்த நிறுத்தத்திற்கு அரசைத் தள்ளியது

## — திருமலையில் பா.உ. க.துரைரெட்ணசிங்கம்

(திருமலை)

யுத்த நிறுத்த உடன்படிக்கையை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக்கொண்டது சமாதானத்தைக் கொண்டு வரவேண்டும் என்ற அக்கறையினால் அல்ல விடுதலைப்புலிகளின் இராணுவ பலம் காரணமாகவே சிறிலங்கா அரசு, ஏ-9 வீதியைத் திறப்பதற்கு நூற்றுக் கணக்கான படையினரை இழந்தும் முடியவில்லை. ஆனால், யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் தான் ஏ-9 வீதி திறக்கப்பட்டது. சமாதானத்தின் பெறுமதி எத்தகையதானது என்பதை தென்பகுதி மக்கள் உணர வேண்டும். இவ்வாறு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் தம்பலகாமம் கிராமத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடத்தப்பட்ட தையல் பயிற்சி நெறியின் நிறைவு நிகழ்வு மற்றும் தைத்த ஆடைகளின் கண்காட்சி நிகழ்வில் பிரதம அதிதியாகப் பங்குபற்றிப் பேசும்போது குறிப்பிட்டார்.

இந்நிகழ்வுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழக தம்பலகாமம் இணைப்பாளர் நல்லசிவம் தலைமை வகித்தார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், "சிங்கள அரசியல் கட்சிகள், தமிழ் தேசியப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண்பது குறித்து அலட்சியமாகவிருந்து வருவதன் காரணத்தினால் தான் வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் சனாதிபதித் தேர்தல் குறித்து அலட்டிக்கொள்ளாதுள்ளனர். யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தைக் கொண்டு வரப்போவதாகக் கூறி சனாதிபதித் தேர்தலில் 1994ஆம் ஆண்டில் சந்திரிகா போட்டியிட்ட போது, வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களில் 85 சதவீதமானவர்கள் அவருக்கு வாக்களித்தனர். தந்தை விட்ட தவறுக்கு சந்திரிகா பிராயச்சித்தம் செய்யப்போவதாக தமிழ் மக்கள் எண்ணினர். நடந்தது என்ன? 11 ஆண்டுகள் அப்பதவியிலிருந்து விலகப்போகும் சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் அவர் நடத்திய யுத்தத்தில் தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பத்தையே அடைந்தனர். இதனால் சனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர்" எனத் தெரிவித்ததுடன், திருமலை மாவட்டத்தில் மூதூர் கிழக்கு மற்றும் ஈச்சிலம்பற்று தமிழ் மக்கள் தங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு செல்ல முடியாத நிலையை அரச படையினர் ஏற்படுத்தியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழக திருமலை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் சி. குமரகுருபரன், தம்பலகாமம் பிரதேச செயலாளர் என். சிங்கராயர், பொற்கேணி கி. மு. சங்கத்தலைவர் திருச்செல்வம், தமிழர் புனர்வாழ்வுக் கழக திருமலை திட்டமிடல் அலுவலர் வே. கலைவர்ணன் ஆகியோரும் பேசினர். பயிற்சியை நிறைவு செய்த யுவதிகளுக்கு அதிதிகள் சான்றிதழ்களை வழங்கினார்கள். நிகழ்வு தமிழர் புனர்வாழ்வுக்கழக தம்பலகாமம் பிரதேச அலுவலகத்தில் இடம்பெற்றது. (25)

# காணிகள் அளவிடப்படாததால் வீடமைப்புப் பணிகள் பாதிப்பு

(அலுவலக செய்தியாளர்)

காணிகளை அளவீடு செய்யாததால் நாயாறு குடியிருப்பு மக்கள் நிரந்தர வீடுகளை அமைக்க முடியாதுள்ளனர்.

கடந்த வருட சுனாமிப் பேரலையின் காரணமாக இடம்பெயர்ந்து தற்காலிக குடியிருப்புகளில் குடியமர்ந்துள்ள மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான காணி தெரிவு செய்யப்பட்டும் அவற்றை உரிய அளவுகளுக்கேற்ப பிரித்து வழங்கப் படாததன் காரணமாக அப்பகுதி மக்களுக்கான நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்வந்த நிறுவனத்தினரால் அவ் வேலைத் திட்டத்தை மேற்கொள்ள முடியாதுள்ளதாக அக்குடியிருப்பு மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அக்குடியிருப்பு மக்களுக்கான தேவைகளை நிவர்த்தி செய்யவென பொறுப்பேற்றுள்ள "சீட்" நிறுவனத்தின் நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான தளபாடங்களையும் ஏனைய பொருட்களையும் அப்பகுதிக்குக் கொண்டுசென்று தயார் நிலையில் வைத்திருக்கின்றபோதும் சம்பந்தப்பட்டவர்கள் காணியை அளவீடு செய்து தராததனால் தமக்கான நிரந்தர வீடுகளை அமைக்க முடியாதுள்ளதாகவும், தாம் சம்பந்தப்பட்டவர்களுடன் பலமுறை தொடர்புகொண்ட போதும் இதுவரை அதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (ச)

# ஊர்காவல்துறையில் பொதுமக்கள் மீது ஈ.பி.டி.பி படையினர் தாக்குதல்!

## — வீடு, வீடாகவும் நேற்றுத் தேடுதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். தீவகம் ஊர்காவல் துறையில் ஈ.பி.டி.பியினர் மீது நேற்று முன் தினம் அடையாளம் தெரியாதோர் நடத்திய தாக்குதலை அடுத்து நேற்று புதன்கிழமை அப்பகுதியில் சிறிலங்கா படையினரும் ஈ.பி.டி.பி. தேசவிரோதிகளும் இணைந்து தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இந்தத் தேடுதலின்போது இளைஞர் மற்றும் யுவதிகளைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர். வீடு, வீடாக நேற்றுக் காலை தேடுதல் நடாத்தப்பட்டு வீடுகளில் இருந்தோரை விசாரணை என்ற பெயரில் வெளியே அழைத்து படையினரும் ஈ.பி.டி.பி.னரும், இளைஞர், யுவதிகளைப் பலமாகத் தாக்கியுள்ளனர். இதனால் அப்பகுதி மக்கள் பலத்த ஆத்திரமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# மாவீரர் தினத்தை முன்னிட்டு சிரமதானப் பணி

(வட்டக்கச்சி)

தமிழீழ மாவீரர் தினத்தை முன்னிட்டு வட்டக்கச்சி மகாவித்தியாலத்தில் சிரமதானப் பணி நடைபெற்றுள்ளது.

இப்பணியானது 2005.11.1[illegible] அன்று காலை வலயப் பொறுப்பாளர் இராம ஜெயம் தலைமையில் இடம் பெற்றது. சிரமதானப் பணிமூலம் பாடசாலையின் வளாகத்தில் உள்ள சிறுபற்றைக் காடுகள் மரங்கள் வெட்டி சிரமதானப் நடைபெற்றது. அத்தோடு இ[illegible] சிரமதானப் பணியில் கிராம சேவையாளர் ஜோன் ஜெகநாதன், ஊர[illegible] மேம்பாட்டுக் குழுத்தலைவர், செ[illegible]லாளர், பொருளாளர் என பல[illegible] கலந்து கொண்டனர். அத்தோடு அடு[illegible]த கட்டமாக வீதியோரம் சிரம தான[illegible] பணியும் நடைபெறவுள்ளது. ([illegible]

# புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய மண்டபத்தில் இசைத்தட்டுக்கள் வெளியீட்டு விழா

(அலுவலகச் செய்தியாளர்)

ஜேம்ஸ்ராஜின் இசையில் "ஈரநினைவுகள்", தேனிசைச் செல்லப்பாவின் இசையில் "தாய் நிலக்காற்று" இசைப்பிரியனின் இசையில் கரும்புலிகள் (பாகம் 09) பாடல் இசைத்தட்டுக்களின் வெளியீட்டு அறிமுகம் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 19 ஆம் திகதி மாலை 7.00 மணிக்கு புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ள மேற்படி வெளியீட்டு நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் ஏற்பாட்டாளர்கள் வேண்டியுள்ளனர். (சோ)

# காது, மூக்கு, தொண்டை சிகிச்சை

புதுக்குடியிருப்பு சத்திரசிகிச்சை நிபுணர் பொன்னம்பலம் நினைவு மருத்துவமனையில் நாளையும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையும் வெளிநாட்டிலிருந்து வருகை தந்திருக்கும் காது, மூக்கு, தொண்டை, சத்திரசிகிச்சை நிபுணர் றொபேட் பெஞ்சமின் அவர்கள் நோயாளர்களைப் பார்வையிட்டு சிகிச்சை வழங்கவுள்ளார்.

தெரிவு செய்யப்படுவோருக்கு சத்திரசிகிச்சையும் மேற்கொள்ளப்படவுள்ளது. பயன் பெற விரும்புவோர் புதுக்குடியிருப்பு சத்திரசிகிச்சை நிபுணர் பொன்னம்பலம் நினைவு மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.


## 35ஆவது பிறந்த நாளும் 8ஆம் ஆண்டு நினைவலையும்



மேஜர் இராவணன்/ரஜீவ்
(மகாதேவன் உமாசங்கர்)
சுழிபுரம் மேற்கு, யாழ்ப்பாணம்.

சம்பவம் யாழ் மாவட்டம் கோப்பாய் மாதா கோவில் பகுதியில் இராணுவத்துடனான மோதலில்..

| மண்ணில் | மண்ணுக்காக |
| --- | --- |
| 17-11-1970 | 28-11-1997 |

இன்று நீ மலர்ந்து 35ஆம் ஆண்டு - ஆம்!
நீ எம் மண்ணிற்காய் உதிர்ந்த - அந்நாள்
தமிழீழ திருநாளாம் மாவீரர் நாள் - இதில் உன்
எட்டாம் ஆண்டு என்பதை நினைவு கூர்ந்து
கண்ணீரால் கழுவிய பூக்களால் தினமும்
உன் பொன் முகத்தை வருடி - உன் வீரத்தை
எண்ணி - நெஞ்சு விம்முகின்றோம்!

அம்மா, அப்பா, அக்காமார், அத்தான்மார், தம்பிமார், மைத்துனர், மருமக்கள் மற்றும் உறவினர்கள்.

(சி-13274)



# பிரதேச சபை, கரைச்சி, கிளிநொச்சி

# அறிவித்தல்

கிளிநொச்சி நகரின் சுத்தம், சுகாதாரம் என்பனவற்றினைப் பேணுமுகமாகவும், தற்போதைய பெருமழை காரணமாக வீதிகளில் நீர் தேங்குவதனை அகற்றுதல், கழிவுவாய்க்கால்கள் புனரமைத்தல், பாலங்கள் அமைத்தல், புனரமைத்தல், வீதிகளைப் புனரமைத்தல் சம்பந்தமாகவும், உடன் தீர்வு காண்பதற்கு "அவசரகால வீதி, வடிகால் புனரமைப்புக்குழு" நியமிக்கப்பெற்று, பிரதேச சபையின் பணிமனையில் வாராந்தம் கலந்துரையாடி ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இக்குழுவில், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஆகியன உறுப்பினர்களாகவுள்ளன. இக்குழு பொதுமக்களிடமிருந்து தேவைகள் சேவைகள் என்பனவற்றினையும், முறையீடுகளையும் பெற்றுக்கொள்ள விரும்புகின்றது. இவற்றினை கரைச்சிப் பிரதேச சபைக்கு நேரிலோ அல்லது 0212285761 இலக்கத் தொலைபேசி மூலமாகவோ தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். "

சிறப்பு ஆணையாளர்
கரைச்சிப் பிரதேசசபை
கிளிநொச்சி.

(சி.13277)

# தீவிரவாதிகளின் பயிற்சிக்களமாக பாகிஸ்தான் விளங்குகிறது

## -அமெரிக்கக் குழு கண்டனம்

(வோஷிங்டன்)

**தீவிரவாதிகளின் புகலிடமாகவும், பயிற்சிக்களமாகவும், பாகிஸ்தான் விளங்குகின்றது என்று அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.**

2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர்11ஆம் திகதி அமெரிக்காவில் நடந்த தீவிரவாதத் தாக்குதல் பற்றி விசாரணைக்குழு விசாரணை நடத்தி பல பரிந்துரைகளைச் செய்தது. இந்தப் பரிந்துரைகள் எந்த அளவுக்கு நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது என்பது பற்றி ஒரு குழு ஆராய்ந்துள்ளது.பாராளுமன்ற உறுப்பினர் லீ ஹமில்டன் தலைமையிலான அந்தக் குழு ஆராய்ந்து அறிக்கை தயாரித்துள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது தீவிரவாதிகளின் புகலிடமாகவும், பயிற்சிக்களமாகவும் பாகிஸ்தான் தொடர்ந்து விளங்குகின்றது, தீவிரவாதிகளை ஒடுக்க முஷாரப் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு அந்த நாட்டு அரசை புஷ் வலியுறுத்த வேண்டும்.

தீவிரவாதத்தை ஒடுக்க முஷாரப் பெரும் முயற்சி எடுத்திருக்கிறார். இருந்த போதிலும், அவர் இன்னும் அதிகம் செய்து இருக்க வேண்டும் அப்படிச் செய்யாது குறித்து நாங்கள் ஏமாற்றம் அடைந்துள்ளோம்.

மதவெறிகளைப் போதிக்கும் அரபி பாடசாலைகளைக் கட்டுப்படுத்த முஷாரப் தவறி விட்டார்.

பாகிஸ்தானில் பதுங்கியிருக்கும் பின் லேடனைப் பிடிப்பதற்கு முழு அளவிலான ஒத் துழைப்பு பாகிஸ்தானிடம் இருந்து கிடைக்கவில்லை.

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்கு உதவி செய்யும் போது பாகிஸ்தானில் கல்விச் சீர்திருத்தம் ஏற்பட வழிவகுக்க வேண்டும். அரசியல் சீர்திருத்தம் ஏற்படவும் வழி வகுக்க வேண்டும்.இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



ஹங்கேரியில் உள்ள போர் அருங்காட்சியகத்தில் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கும் ஏவுகணை வைக்கப் பட்டுள்ளது. அதை பள்ளி மாணவர்கள் பார்வையிட்டுச் செல்கின்றனர்.

# காஷ்மீரில் கைக்குண்டுத்தாக்குதல் மூன்று பேர் ஸ்தலத்தில் பலி

(டில்லி)



இந்தியாவின் ஆளுகைக்குட்பட்ட காஷ்மீரின் தலைநகரான சிறீநகரில் நேற்றுக் காலை கார்க் குண்டொன்று வெடித்ததில் மூன்று பேர் உயிரிழந்ததுடன் முப்பதிற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

சிறிநகரின் மத்திய பகுதியில் அமைந்துள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான ஜம்முகாஷ்மீர் வங்கியின் தலைமை அலுவலகத்திற்கு வெளியே நடந்த இந்தச் சம்பவத்தின்போது மர்காணசபை அங்கத்தவர் அஸ்மான் பகீத்தும் காயமடைந்தவர்களுள் ஒருவராவார்.

இந்தப் பகுதியில் அடுத்தடுத்து நடைபெற்ற குண்டுத்தாக்குதலில் மூன்றாவது தாக்குதல் இதுவாகும்.

# அமெரிக்காவில் வெளிநாட்டு மாணவர் எண்ணிக்கை குறைந்துள்ளது

(வோஷிங்டன்)

அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் வெளி நாடுகளில் இருந்து சென்று படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை இரண்டாவது ஆண்டாகக் குறைந்துள்ளது.

2001ஆம்ஆண்டுசெப்ரெம்பர் 11 ஆம்திகதி நடந்த தீவிரவாதத்தாக்குதலுக்குப்பின்தான் இந்த எண்ணிக்கை குறைந்தது. 2004-2005 ஆம் ஆண்டில் சேர்ந்த வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை 1.3 சதவீதம் குறைந்தது. முந்தைய ஆண்டில் 2.4 சதவீதம் குறைந்தது. அமெரிக்காவில் படிக்கும் மாணவர்களில் இந்தியர்கள் அதிகளவில் உள்ளனர்.

80 ஆயிரத்து 466 மாணவர்கள் இந்த ஆண்டு இந்தியாவிலிருந்து சென்றுள்ளனர். இது கடந்த ஆண்டை விட ஒரு சதவீதம் அதிகமாகும். சீனா இரண்டாவது இடத்திலும், தென்கொரியா மூன்றாவது இடத்திலும், ஜப்பான் நான்காவது இடத்திலும் உள்ளன.




அவுஸ்திரேலியாவின் புதிய தொழிலாளர் கொள்கையைக் கண்டித்து மனிலாவில் அவுஸ்திரேலிய தூதரகத்திற்கு முன் சாகும் வரை உண்ணாவிரதத்தை தொழிலாளர்கள் மேற்கொண்டுள்ளனர்.

# ஆப்கானில் குண்டுத்தாக்குதல் பலர். இறந்திருக்கலாம் என அச்சம்

(கந்தகார்)

ஆப்கானிஸ்தானின் கந்தகாரில் சன நெரிசல் மிகுந்த சந்தைப்பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற குண்டுவெடிப்பில் பலர் இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

இறந்தவர்களின் எண்ணிக்கை குறித்த விபரம் சரியாகத் தெரியவில்லையென உள் துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுப் பயணிகள் சென்று கொண்டிருந்த பேருந்தொன்றை குறிபார்த்தே இக்குண்டு வெடிப்பு நடத்திருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

காபூலில் நடைபெற்ற இரட்டைத் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடந்து இரண்டு நாட்களுக்குப் பின்பு நேற்று இத்தாக் குதல் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.



தென்கொரியாவில் உள்ள சியோலில், அரசைக் கண்டித்து நடந்த விவசாயிகள் ஊர்வலத்தில் பொலிசாரின் வாகனங்கள் தீ வைத்து எரிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

# மருத்துவமனைக்குள் மதுபான விடுதி

வயதான நோயாளிகளின் உடல் நிலையை உற்சாகமாக வைத்துக் கொள்வதற்காக மருத்துவமனைக்குள்ளேயே ஒரு மதுபான விடுதியை தனியார் மருத்துவமனை ஒன்று நடத்தி வருகிறது. அயர்லாந்து நாட்டில் மொனோகான் என்ற நகரில் உள்ள புனித மேரி மருத்துவமனை இந்த மதுபான விடுதியை நடத்தி வருகின்றது. 85 வயதிற்கு மேற்பட்ட நோயாளிகளுக்கு வழங்கப்படும் மது அவர்களின் வாழ்நாளை அதிகரிக்கும் என்று நம்புவதாக அந்த மருத்துவமனை கூறியுள்ளது. காலை 11 மணி முதல் இரவு 9.00 மணி வரை இந்த விடுதி செயற்படும்.



பாகிஸ்தான் கராச்சி நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்பினையே படத்தில் காண்கின்றீர்கள். இதில் ஆறு பேர் கொல்லப்பட்டனர்.

# அரச அதிகாரியை ஜப்பான் இளவரசி மணந்தார்

(டோக்கியோ)

ஜப்பான் இளவரசி சயாகோ, அரசு அதிகாரியான ஜோஷிகி குரோடாவை திருமணம் செய்து கொண்டார். ஜப்பான் மன்னர் அகிகிட்டோவின் ஒரே மகளான சயாகோ, அரச குடும்பத்தைச் சேராதவரை காதலித்துக் கைப்பிடித்திருக்கிறார்.

இளவரசிக்கு வயது 36. அவர் மணந்து இருக்கும் யோஷிகிக்கு வயது 40. இவ்வளவு அதிக வயதில் திருமணம் செய்து கொள்ளும் முதல் இளவரசி இவர்தான்.

திருமணத்துக்குப் பின் அவர் அரண்மனையை விட்டு வெளியேறி விடுவார். திருமணம் பொது விடுதியில் நடந்தது. திருமணத்திலும் அதையொட்டிய விருந்திலும் 130 விருந்தினர்கள் கலந்து கொண்டனர். பிரஞ்சு உணவு வகைகள் விருந்தில் பரிமாறப்பட்டன. திருமணத்திற்குப் பின் மணமகன் தங்கியிருக்கும் வாடகை வீட்டில் சயாகோ குடியேறுகிறார்.

அந்த வீட்டில் அவர்களுடன் மணமகனின் விதவைத் தாயாரும், வசித்து வருகிறார்.

# 175 ஆவது பிறந்த நாள் கொண்டாடிய ஆமை

(கான்பரா)

உலகின் மிக வயதான மிருகங்களில் ஒன்றான ஹேரியட் என்ற ஆமைக்கு நேற்று முன்தினம் 175 ஆவது பிறந்த நாள் கொண்டாடப்பட்டது.

அவுஸ்திரேலியாவில் மிருகக் காட்சிச் சாலை ஒன்றில் கடந்த பதினேழு ஆண்டுகளாக ஹேரியட் என்கின்ற ஆமை உயிர் வாழ்ந்து வருகிறது. இந்த ஆமையை கடந்த 1835 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அறிவியல் அறிஞர் சார்லஸ் டார்வின் பிடித்து வந்ததாகக் கூறப்படுகின்றது. இருப்பினும், வரலாற்று அறிஞர்கள் பலரும் இந்த உண்மையை ஏற்றுக் கொள்ளவில்லை. நேற்று முன்தினம் இந்த ஆமைக்கு 175 ஆவது பிறந்த நாள். உலகிலேயே வயதான ஓடுகளுடன் கூடிய ஊர்ந்து செல்லும் பிரிவைச் சேர்ந்த விலங்கு என்று இது கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.

# சந்திரனில் நிலம்விற்கப் போவதாக விளம்பரம் செய்த போலி நிறுவனத்துக்கு தடை

(பீஜிங்)

சந்திரனில் நிலம் விற்கப்போவதாக விளம்பரம் செய்தது ஒரு நிறுவனம். அக் குறிப்பிட்ட நிறுவனம் கடந்த ஒக்ரோபர் மாதம் 19 ஆம்திகதி தொடங்கப்பட்டது. சந்திரனில் நிலம் விலைக்கு கிடைக்கும் என்று அது விளம்பரம் செய்தது. விளம்பரம் வெளியான மூன்று நாட்களில் 49 ஏக்கர் நிலம் விற்கப்பட்டது. 34 வாடிக்கையாளர்கள் நிலங்கள் வாங்கினார்கள்.

இந்த விற்பனை பற்றி அரசுக்கு தெரியவந்ததும் அது இந்த நிறுவனத்தின் உரிமத்தை இரத்துச் செய்தது. இலாபம் அடைவதற்காக சட்டவிரோதமான யூக அடிப்படையிலான வியாபாரம் செய்வதாகக் கூறி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த நடவடிக்கையை எதிர்த்து அரசாங்கம் மீது அந்த நிறுவனம் வழக்குத் தொடர்ந்துள்ளது. சந்திரனில் நிலத்தை விற்பதைத் தடைசெய்யும் சட்டம் எதுவும் இல்லை என்று அந்த வழக்கில் கூறப்பட்டுள்ளது.

# ஆளுநர் பதவி நீக்கம்

(பினஸ்ஏர்ஸ்)

ஆர்ஜென்டினா நாட்டின் தலைநகர் பினஸ்ஏர்சில் உள்ள இரவு விடுதியில் கடந்த ஆண்டு நடந்த தீ விபத்தில் 194 பேர் உடல் கருகி இறந்தனர்.

இது தொடர்பாக நடந்த விசாரணையில் இரவு விடுதிக்கு உரிமைப் பத்திரம் வழங்குவதில் முறைகேடு நடந்திருப்பதும் தெரிய வந்தது. இதைத் தொடர்ந்து நகர ஆளுநர் இபாரா மீது பாராளுமன்றத்தில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து உடனடியாகவே ஆளுநர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

# கிளிநொச்சி முல்லையில் பிரதேச ரீதியாக மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

**கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் பிரதேச ரீதியாக மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வும் விசேட கலந்துரையாடலும் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.**

இந்தவகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதியன்று முற்பகல் 10.00 மணிக்கு பூநகரி பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் பூநகரி மகாவித்தியாலயத்திலும், பரந்தன் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் பரந்தன் இந்து மகா வித்தியாலயத்திலும், அக்கராயன் கோணாவில் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் கோணாவில் அ.த.க பாடசாலையிலும் 21 ஆம் திகதியன்று முற்பகல் 10.00 மணிக்கு விசுவமடுபிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் விசுவமடு மகாவித்தியாலயத்திலும், கிளி. உருத்திரபுரம் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் உருத்திரபுரம் மகாவித்தியாலயத்திலும் 22 ஆம் திகதி முற்பகல் 10.00மணிக்கு கிளிநொச்சி பாரதிபுரம் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் பாரதிபுரம் பாரதி வித்தியாலயத்திலும், முழங்காவில் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் முழங்காவில் மகாவித்தியாலயத்திலும், அக்கராயன் வன்னேரிக்குளம் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் வன்னேரிக்குளம் ஐயனார்புரம் யோகர் சுவாமிகள் திருவடி நிலையத்திலும், 23 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு வட்டக்கச்சி பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் இராமநாதபுரம் மகா வித்தியாலயத்திலும், விசுவமடுப் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் தருமபுரம் மகாவித்தியாலயத்திலும், 24 ஆம் திகதியன்று முற்பகல் 10.00 மணிக்கு கிளிநொச்சி நகர மாவீரர்களின் பெற்றோர்கள் கிளிநொச்சி மத்தியகல்லூரியிலும், அக்கராயன் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் அக்கராயன் மகாவித்தியாலயத்திலும், பளைப் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் பளை மத்தியகல்லூரியிலும், 25 ஆம் திகதியன்று முற்பகல் 10.00 மணிக்கு வடமராட்சி கிழக்கு பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் உடுத்துறை மகாவித்தியாலயத்தில் வைத்தும் கௌரவிப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

அதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரதேசரீதியாக மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

எதிர்வரும் 21 ஆம் திகதியன்று முற்பகல் 10.00 மணிக்கு முள்ளியவளை பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் குமுழமுனை மகாவித்தியாலயத்திலும், ஒட்டு சுட்டான் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் வலதுகரை அ.த.க பாடசாலையிலும் ,22 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் வள்ளிபுனம் அ.த.க பாடசாலையிலும், உடையார்கட்டு பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் உடையார்கட்டு மகா வித்தியாலயத்திலும், 23 ஆம்திகதி முற்பகல் 10.00 மணிக்கு முள்ளியவளை பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியிலும், பாண்டியன்குளம் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் பாண்டியன்குளம் மகாவித்தியாலயத்திலும், முல்லைத்தீவு பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்திலும், 24 ஆம் திகதியன்று முற்பகல் 10.00 மணிக்கு மல்லாவி பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் மல்லாவி மத்திய கல்லூரியிலும், ஒட்டுசுட்டான் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் கற்சிலை மடு அ.த.க பாடசாலையிலும், 25 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிலும், மாங்குளம் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் மாங்குளம் மகா வித்தியாலயத்திலும், 26 ஆம் திகதியன்று முற்பகல் 10.00 மணிக்கு தண்டுவான் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் தண்டுவான் அ.த.க பாடசாலையிலும் வைத்து கௌரவிப்பு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ,08)

# நடமாடும் சேவைகள் மூலம் காலம் கடந்த பிறப்பு, இறப்புப் பதிவுகள்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் நடமாடும் சேவைகள் மூலம் காலம் கடந்த இறப்புப் பிறப்புப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

எதிர்வரும் 22ஆம் திகதியன்று கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ள காலம் கடந்த இறப்புப் பிறப்புப் பதிவுகளை மேற்கொள்ள வருபவர்கள் தத்தமது கிராம சேவை அலுவலர்களிடம் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களைப் பெற்று அதனைப் பூரணப்படுத்தி அன்றைய தினம் நடமாடும் செயலகத்தில் ஒப்படைக்கும் படியும் வேண்டப்பட்டுள்ளனர்.

அத்துடன் பிள்ளைகளின் பிறப்பு இறப்புப் பதிவுகளை மேற்கொள்ளும் பொருட்டு தாய் தந்தை இருவரும் நேரில் சமுகம் கொடுப்பதுடன் தேசிய அடையாள அட்டை குடும்ப அட்டைகளுடன் சமுகம் கொடுக்கும் படியும் பிறப்பு இறப்புப் படிவங்கள் தேடுதலுக்கான முத்திரைச் செலவுகளும், இலவசமாக வழங்கப்படுமெனவும், அன்றையதினத்தில் புதிய விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாதெனவும், காலம் கடந்த இறப்புப் பிறப்பு பதிவுகளை மேற்கொள்ள வேண்டியவர்கள் காலதாமதமின்றி அந்தந்தப் பகுதி கிராம சேவை அலுவலர்களுடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் கரைச்சிப் பிரதேச செயலாளர் க. சுலோஜினி கேட்டுக் கொண்டுள்ளார். (சோ)

# அதிர்ஷ்டசாலிகளுக்கு மாவீரர் தினத்தில் பரிசு

(அலுவலக செய்தியாளர்)

மாவீரர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி தங்க நிலா நகை மாடத்தினர் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதிமிக்க தங்கப் பரிசினை அதிர்ஷ்ட குலுக்கல் மூலம் வழங்கவுள்ளனர்.

இதற்கான அதிர்ஷ்ட குலுக்கல் நிகழ்வு நேற்று முன்தினம் மேற்படி நகை மாடத்தில் நடைபெற்றது.

முதலாவது பரிசாக ஒரு தங்கப் பவுணும், இரண்டாவது பரிசாக அரைத் தங்கப்பவுணும், மூன்றாவது பரிசாக கால் தங்கப் பவுணும் வழங்கப்படவுள்ளன.

முதலாவது பரிசிற்குரியவராக தாளையடி வடக்கைச் சேர்ந்த ஜெ.செல்வக் கண்மணியும், இரண்டாவது பரிசிற்குரியவராக கிளிநொச்சிப் பரந்தனைச்சேர்ந்த என். நிலாவும், மூன்றாம் பரிசிற்குரியவராக ஜெயந்தி நகரைச் சேர்ந்த உ.புஸ்பலீலாவும் அதிர்ஷ்ட மூலம் தெரிவு செய்யப்பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான பரிசில்கள் மாவீரர் தினத்தன்று வழங்கப்படவுள்ளதென நகை மாடத்தினர் தெரிவித்துள்ளனர். (சோ)

# சொந்தக்காணிகளற்ற நிலையில் வலயங்கட்டு, முள்ளிக்குள மக்கள்

(மன்னார்)

மன்னார் வலயங்கட்டு, முள்ளிக்குளம் கிராமத்திலுள்ள மக்கள் பலர் சொந்தக்காணிகளற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

வலயங்கட்டுக்கிராமத்தில் 37 குடும்பங்களும், முள்ளிக்குளம் கிராமத்தில் 33 குடும்பங்களும் சொந்தக் காணிகளற்ற நிலையில் இருப்பதாகவும் சொந்தக்காணிகளில்லாத காரணத்தினால் இவர்களுக்கு உதவி வழங்கும் நிறுவனங்கள் வழங்கி வரும் உதவிகளும் வழங்கப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (46)

# திருக்கேதீஸ்வர ஆலய திருவிழா நிகழ்ச்சி மாற்றம்

திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபையின் வெளியீடாகிய பார்த்திப ஆண்டு நிகழ்ச்சி நிரலில் விநாயக விரதாரம்பம் கார்த்திகை முதலாம் நாள் (16.11.2005) திருவெம்பாவை ஆரம்பம் கார்த்திகை 23 ஆம் நாள் (08.12.2005) ஆருத்திரா தரிசனம் மார்கழி இரண்டாம் நாள் (17.12.2005) விநாய விரத நிறைவு விழா. கார்த்திகை 21 ஆம் (06.12.2005) நாட்கள் எனத் தெரிவித்திருந்தோம். அவை தவறெனக் கருதி கீழ் காணும் நாட்களே சரியானதென்பதை அறியத்தருவதாக ஆலய திருப்பணிச்சபை அறிவித்துள்ளது. விநாயக விரதாரம்பம் - மார்கழி 01 ஆம் நாள் (16.12.2005) வெள்ளிக்கிழமை, விநாயக விரத நிறைவு - மார்கழி 20 ஆம் நாள் (04.01.2006) புதன்கிழமை, திருவெம்பாவை ஆரம்பம்- மார்கழி 20 ஆம் நாள் (04.01.2006) புதன்கிழமை நடேசர் அபிடேகம் மார்கழி 28ஆம் நாள் பின்னிரவு ஆருத்திரா தரிசனம் -மார்கழி 29 நாள் (13.01.2006) வெள்ளிக்கிழமை என்பனவே சரியானவையாகும்.

# மூதூர் கிழக்கில் மாலை 6 மணிக்குப் பின் மீன் பிடிக்க படையினர் தடை

(திருமலை)

மூதூர் கிழக்குப் பகுதி மீனவர்கள் மாலை ஆறு மணிக்குப் பின் கடலில் மீன்பிடி வள்ளங்களை இறக்கக் கூடாது என்று சிறிலங்காப் படையினர் தடை விதித்துள்ளதாக திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்துள்ளார்.

கடலில் தங்களது உயர் பாதுகாப்பு வலயத்தைத் தாண்டி இம்மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல வேண்டியிருப்பதால் தான் இத்தடை விதிக்கப்பட்டிருப்பதாகப் படையினர் அறிவித்துள்ளனர்.

இதன் காரணமாக மூதூர் கிழக்குப் பகுதி மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடித்தலில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் எழிலன் தெரிவித்துள்ளார்.

எமது பிரதேசத்தில் 150 உழவு இயந்திரங்கள் உள்ளன. ஆனால், 5000 லீற்றர் டீசல் மாத்திரமே கட்டைபறிச்சான் சோதனைச்சாவடியூடாக எடுத்துச் செல்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. கடற்கோளினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகளை எவ்வாறாவது சீர்குலைக்க வேண்டுமென்ற நோக்கத்துடனேயே பொருட்களை எடுத்துச் செல்வதற்கு படையினர் தடை மற்றும் கட்டுப்பாடுகளை விதிக்கின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பன்னவேலையை ஊக்குவிக்க உற்பத்திப் போட்டியும், கண்காட்சியும்

(விசுவமடு)

பன்ன சேவையில் ஈடுபாடுடைய அனைவரையும் ஊக்குவிக்கும் பொருட்டு கண்காட்சியும், உற்பத்திப் பொருட்களுக்கான போட்டியும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடத்தப்படவுள்ளது.

வெளியிடங்களில் இருந்து கொண்டு வரப்படும் பொருட்களை றைசோன், பிளாஸ்திக், பொலித்தின் வகைப் பொருட்களால் எமது மண்ணும், எமது தாயக தேசமக்களும் பாதிப்படைவதுடன் எமது தாயக தேசம் சூழல் மாசு அடையும் ஓர் அபாயகரமான சூழ்நிலைக்கு வந்துள்ளது.

இந்நிலையில் இதற்கு மாற்றீடாக பாவிக்கக்கூடிய எமது தேசிய வளமான பனைவளத்தின் பொருட்களில் இருந்து உற்பத்தி செய்யும் பொருட்களே உகந்ததாகும்.

இந்த வகையில் பன்ன வேலையில் ஈடுபாடுடைய அனைவரையும் ஊக்குவிக்கும் பொருட்டு ஓர் கண்காட்சியும், உற்பத்திப்பொருட்களுக்கான போட்டியும் நடத்தப்படவுள்ளது.

இதற்கமைவாக தமிழீழ தேசத்திலுள்ள அனைத்து பன்னவேலையில் ஈடுபடும் உற்பத்தியாளரும், அனைத்து பன்னவேலைப்பயிற்சியாளர்களும் தமது உற்பத்திப் பொருட்களை போட்டிநிலைக்குத் தகுந்தாற்போல் உற்பத்தி செய்யவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நடுவப்பணியகத்தில் வரும் டிசம்பர் மாதம் 21ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் ஒப்படைக்குமாறு உற்பத்தியாளர்களால் ஒப்படைக்கப்படும் பொருட்களுக்கான போக்குவரவுச் செலவுகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனம் பொறுப்பேற்று வழங்கும் எனவும் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.(46)

# நாச்சிக்குடா கிராமத்தில் கட்டாக்காலிகள் தொல்லை

(பூநகரி)

பூநகரி- நாச்சிக்குடா கிராமத்தில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லைகள் அதிகரித்து வருகின்றது.

இதன் காரணத்தினால் இக்கிராமத்திலுள்ள பொதுச்சந்தை மற்றும் பொதுக்கட்டடங்கள் போன்றவற்றில் இரவு நேரங்களில் கால்நடைகள் தங்கி இடங்களை அசுத்தப்படுத்தி வருவதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக தொடர்புடையவர்கள் எவரும் கவனம் எடுக்கவில்லை எனவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (46)

# க.பொ.த.சாதாரணதர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தமர்வு

முல்லைமாவட்ட மாணவர் அமைப்பு சோ.ஆ (ZOA) நிறுவனத்தின் அனுசரணையுடன் குமுழமுனை இளந்தளிர் கல்வி நிலையம் நடாத்தும் கல்வி பொதுதராதர சாதாரணதர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டலுக்கான விசேட கருத்தமர்வு நேற்று முன்தினம் காலை ஒன்பது மணிக்கு குமுழமுனை மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இளந்தளிர் கல்வி நிறுவன நிர்வாகி த.தயாபரன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில், பொதுச்சுடரினை குமுழமுனை மகாவித்தியாலய அதிபர் ஜெயஜோதிகாந்தன் ஏற்றினார்.

தமிழீழத் தேசியக்கொடியினை குமுழமுனை வலயப்பொறுப்பாளர் பரிதி ஏற்றினார்.

கருத்துரைகளை குமுழமுனை ம.வி அதிபர் ஜெயஜோதிகாந்தன், குமுழமுனை வலயப்பொறுப்பாளர் பரிதி, செய்தியாளர் எஸ்.சைலா ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்புரையினை முல்லை.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் மயூரன் வழங்கினார்.

இந்த நிகழ்வில் செம்மலை ம.வி, அளம்பில் றோ.க.பாடசாலை, குமுழமுனை ம.வி மாணவர்கள் கலந்து கொண்டனர். இதில் சிறப்புப்பாடங்களான சமூகக்கல்வியும் வரலாறும், கணிதம், விஞ்ஞானம், தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய பாடங்கள் நடாத்தப்பட்டன. விசேடமாக வளவாளர்கள் இக்கருத்தமர்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

# கடும் சோதனை

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து, படையினர் ஆக்கிரமிப்புப் பகுதிக்குச் செல்லும் பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் படையினரால் கடுமையான சோதனைக்குட்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

# வாக்களிப்பு நிலைய முகவர்களாக இளைஞர், யுவதிகள் பங்கேற்க வேண்டாம்

## -மக்கள் படை வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

**சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பு நிலைய முகவர்களாகக் கடமையாற்ற வேண்டாம் என்று யாழ்.குடாநாட்டு இளைஞர், யுவதிகளுக்கு யாழ்ப்பாண மக்கள் படை என்ற அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இன்று நடைபெறவுள்ள சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பு நிலையங்களுக்கான முகவர்களை நியமிக்கும் பணி சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் சார்ந்த கட்சிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக வேலைவாய்ப்பு, பதவி உயர்வு நிரந்தர நியமனம் என்பவற்றைத் தருவதாகக் கூறி யாழ். குடாநாட்டில் வாழும் இளைஞர், யுவதிகளை சனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் சார்பான வாக்களிப்பு நிலையமுகவர்களாக நியமிக்கும் சதிவேலைகளில் ஈ.பி.டி.பி. போன்ற தேசவிரோதக் கும்பல்கள் ஈடுபட்டு வருகின்றன.

சிங்களத் தலைமைகளை தமிழர் என்றும் ஏற்கத்தயாரில்லை என்பதை நிரூபிக்கும் வகையில் தமிழரெல்லாம் கூடிவரும் சனாதிபதித்தேர்தலைப் பகிஷ்கரிக்கத் தீர்மானித்துள்ள நிலையில் சிங்களத்தலைமைகளின் முகவர்களாகப் பணிபுரிவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

எனவே சதிகாரர்களது ஏமாற்று வேலைகளுக்கு யாழ்.குடாநாட்டு இளைஞர், யுவதிகள் துணை போகக் கூடாது என்று வலியுறுத்திக் கூறியுள்ள யாழ்ப்பாண மக்கள் படை என்ற அமைப்பு பேரினவாதிகளுக்கு முகவர்களாகப் பணியாற்ற முன் வருவதால் விளைவுகள் ஏற்படும் என்று கடுமையாக எச்சரிக்கையும் விடுத்துள்ளது.

இவ் எச்சரிக்கைகள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் நேற்று முன் தினம் மாலை யாழ்.நகரப்பகுதியில் விநியோகிக்கப்பட்டன.

(33)

# இலவசமாக கால்நடைத்தீவனம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

பருவமழை வீழ்ச்சி ஆரம்பமாகியுள்ளதால் யாழ்.மாவட்ட அரசினர் கால்நடைத் திணைக்களங்களால் கால்நடை வளர்ப்போருக்கு கால் நடைத்தீவனமாக புல் துண்டங்கள் இல்வசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ்.அரசினர் கால்நடைவைத்தி நிலையங்களில் வளர்க்கப்பட்ட நல்லினப் புற்கள் துண்டங்களாக கால்நடைவளர்ப்பவர்களூடாகக் கால்நடைகளுக்குத் தற்போது இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

# யாழ்.சிறைச்சாலையின் பாதுகாப்பு என்றுமில்லாதவாறு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சிறைச்சாலையின் பாதுகாப்பு என்றுமில்லாத வகையில் அதிகரிப்புச்செய்யப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை கைதிகளைப் பார்வையிடப்போவதாகக் கூறி யாழ். சிறைச்சாலையினுள் நுழைந்த இனம் தெரியாத நபர்கள் அங்கு தடுப்புக்காவலில் வைக்கப் பட்டிருந்த் இரு கைதிகளை மீட்டுச் சென்றனர்.

இதனால் யாழ்.சிறைச்சாலை வட்டாரங்களில் ஏற்பட்டுள்ள பரபரப்பான சூழ்நிலையைத் தொடர்ந்தே இவ்வாறு யாழ்ப்பாணச் சிறைச் சாலைக்கான பாதுகாப்பு அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக யாழ்.சிறைச்சாலையின் உட்புறத்தில் ஆயுதம்தாங்கிய பொலிசாரும் சிறைச்சாலைக்கு வெளியே ஆயுதம் தாங்கிய படையினரும் பெருமளவு குவிக்கப்பட்டு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதைவிட சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளைப் பார்வையிடச் செல்வோரின் எண்ணிக்கையும் வலுவாக மட்டுப் படுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களிலும் கைதிகள் மீட்டுச் செல்லப்படுவதைத் தடுக்கும் வகையிலேயே இப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என சிறைச்சாலை அதிகாரிகள் கூறினர். (33)

# வலிகாமம் மேற்கு மக்களை மிரட்டும் சிறிலங்காப் படையினர்

யாழ்.வட்டுக்கோட்டை மக்களின் பெயரால் சிறிலங்கா சனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிப்பதற்கான அழைப்பினை விடுத்தவர்கள் யார் என இனங் காட்டுமாறு வலிகாமும் மேற்கு மக்களை மிரட்டும் நடவடிக்கைகளில் இராணுவமும் பொலிசாரும் ஈடுபட்டுள்ளனர்.

வலிகாமம் மேற்கில் நேற்று முன் தினம் பிற்பகல் படையினரும், பொலிசாரும் மேற்கொண்ட இந் நடவடிக்கைகளால் அப்பகுதி மக்களிடையே பெரும்பீதி ஏற்பட்டுள்ளது.

"தமிழருக்கென ஒரு தலைமை உண்டு. தமிழர் உரிமைகளை நிராகரித்துவரும் சிங்களத்தலைமைக்கான தேர்தலைப் புறக்கணிப்போம்" என்ற தலைப்பில் "வட்டுக்கோட்டை மக்கள்" எனும் பெயரில் வலிகாமம் மேற்குப்பகுதியெங்கும் தேர்தலைப் பகிஷ்கரிப்பதற்கான அழைப்பினை விடுக்கும் சுவரொட்டிகள் ஆயிரக் கணக்கில் ஒட்டப்பட்டிருந்தன.

இதனையடுத்து இராணுவத் துருப்புக்காவி வாகனங்களில் வட்டுகோட்டைப்பகுதியில் வந்திறங்கிய இராணுவம் மற்றும் பொலிசார் நூற்றுக்கணக்கானோர் வீதிகளில் நின்று வலிகாமம் மேற்கு மக்களை வழிமறித்து மேற்படி சுவரொட்டிகளை ஒட்டியது யார் என்பதை இனங் காட்டுமாறு மிரட்டினர்.

வீதியால் சென்றவர்களை ஒவ்வொருவராக வழிமறித்து நேற்று முன் தினம் படையினரும், பொலிசாரும் மேற்கொண்ட இந்நடவடிக்கையால் மக்கள் பீதியடைந்துள்ளனர். (33)

# முன் அறிவித்தலின்றி ஊழியர்கள் இடைநிறுத்தம் ஹலோரஸ்ட் நிறுவன ஊழியர்கள் வேலைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருக்கும் ஹலோரஸ்ட் நிறுவனம் அதன் பணியாளர்கள் நால்வரை முன் அறிவித்தலின்றி வேலைநீக்கம் செய்ததும் நிறுவனத்திலுள்ள ஏனைய குறைபாடுகளைக் கண்டித்து நேற்று முன் தினம் இரண்டாவது நாளாக வேலை நிறுத்தப்போராட்டத்தில் பணியாளர்கள் ஈடுபட்டனர்.

ஹலோரஸ்ட் நிறுவனம் தனது பணியாளர்களுக்கு வழங்குகின்ற சம்பளத்தில் முரண்பாடு மற்றும் பணியாளர்கள் நடத்தப்படுகின்ற விதிமுறை தொடர்பாக பலபிரச்சினைகளை முன்வைத்து வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுவருவதாக பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தமது கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை தொடர்ந்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகத் தெரிவித்தனர்.

இதேவேளை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு சாதகமானமுடிவைப் பெற்றுத்தருவதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் கோரியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் ஹலோரஸ்ட் நிறுவனத்தில் 350 பணியாளர்கள் வேலை செய்கின்றபோது அனைவரும நிறுவனத்திற்கு எதிராக வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதால் அதன் பணிகள் யாவும் முற்றாக முடக்கப்பட்டுள்ளது.

பணியாளர்கள் வெளிநடப்பில் ஈடுபட்டிருப்பதால் ஹலோரஸ்ட் நிறுவனத்தின் ஏனைய ஊழியர்களும் வேலைக்குச் சமுகம் கொடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(கீ)

# ரணில், மகிந்த கொடும்பாவிகள் யாழ். திருநெல்வேலியில் எரிப்பு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சந்தியில் நேற்று நண்பகல் ரணில் மற்றும் மகிந்த ராஜபக்ஷவின் கொடும்பாவிகள் தீயிட்டு எரிக்கப்பட்டன.

கொக்குவிலில் இருந்து பல நூற்றுக்கணக்கான மக்கள் ஊர்வலமாக இவ்விரு கொடும்பாவிகளையும் எடுத்து வந்து தீயிட்டுக் கொழுத்தினார்கள்.

திருநெல்வேலிச் சந்தியில் பாலாலி வீதியில் வைத்து இக் கொடும்பாவிகளைக் கொள்ளிக்குடம் உடைத்து பாடையுடன் தீயிட்டுக் கொழுத்தினார்கள்.

குறிப்பிட்ட நிகழ்வு இடம் பெற்ற வேளையில் அப் பகுதியில் இராணுவத்தினர் பொலிசார் காணப்பட்ட போதிலும் அவர்கள் அதிலிருந்து அகன்று சென்றார்கள். (41)

# தொலைபேசிகள் மூலம் தொல்லை கொடுக்கும் வேட்பாளர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு மக்களிடையே தொலைபேசி வழியாக தேர்தல் பிரச்சாரத்தை முன்னெடுக்கும் நடவடிக்கைகளை சனாதிபதித் தேர்தல் அபேட்சகர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இன்று நடைபெறவுள்ள சிறிலங்கா சனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிப்பது என்ற முடிவை எடுத்துள்ள யாழ். குடாநாட்டு மக்கள் தேர்தல் வேட்பாளர்களது பிரச்சாரக் கருத்துக்களை முற்றாக நிராகரித்து வருகின்றனர்.

இந்நிலையில் யாழ். குடாநாட்டு மக்களிடையே தொலைபேசி மூலமாக தேர்தல் பிரச்சாரங்களை முன்னெடுக்கும் நடவடிக்கைகளை இவர்கள் மேற்கொள்கின்றனர்.

குறிப்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சனாதிபதி வேட்பாளர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரே இவ்வாறான தொலைபேசிப் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

திடீர் திடீரென யாழ். குடாநாட்டவர்களின் கையடக்கத் தொலைபேசி மற்றும் மேசை தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பை ஏற்படுத்தி தமது தேர்தல் விஞ்ஞாபனக் கருத்துக்களை தத்தமது குரல்களிலேயே கூறி தமது சின்னத்துக்கு வாக்களிக்குமாறும் கோருகின்றனர்.

இவர்களது இத்தகைய பிரச்சார நடவடிக்கைகள் தமக்கு தொல்லையாக இருப்பதாகத் தொலைபேசிப் பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்துக்கான கால அவகாசம் முடிந்துள்ள நிலையிலும் இது தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(33)

# ஊடகவியலாளர் வீட்டின் மீது அக்கரைப்பற்றில் கைக்குண்டு வீச்சு

அக்கரைப்பற்றில் திங்கள் நள்ளிரவு ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டின் மீது கைக்குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. அக்கரைப்பற்றைச் சேர்ந்த எம்சகாப் என்பவரின் வீட்டின் மீதே இவ்வாறு தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது எனினும் எவருக்கும் எவ்வித பாதிப்பும் இல்லை.

# பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பி வழங்கல்

ஊற்றுப்புலம், துணுக்காய், பூநகரி, மல்லாவி போன்ற பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்களுக்கு கியூடெக் கரித்தாஸ் வன்னி நிறுவனத்தின் இயக்குனர் வணபிதா பீற்றர் அடிகளாரின் நெறிப்படுத்தலோடு அப்பியாசக் கொப்பிகள் மழைக்கவசங்கள் வழங்கப்பட்டன. இப்பாடசாலைக[illegible]கு இயக்குனர் வணபிதா பீற்றர் அடிகளார் நேரில் விஜயம் செய்தமை கு[illegible]த்தக்கது.

# உலர்உணவு முத்திரை மீளாய்வும் புதிய முத்திரை வழங்கலும்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இடம் பெயர்ந்து வாழும் மக்களுக்கான உலர் உணவு நிவாரண முத்திரைகள் மீளாய்வும் புதிய முத்திரைகள் வழங்கலும், தற்போது கிராம அலுவலர் பிரிவுகளில் உதவி அரசாங்க அதிபர் பணிமனையினரால் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. அந்த வகையில் இது வரையில் புதிய முத்திரை களைப் பெற்று கொள்ளாதவர்கள் எதிர்வரும் 21ஆம் 23ஆம் ஆகிய இரு தினங்களில் மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் பெற்றுக் கொள்ளுமாறு மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ம.ஜெகு கேட்டுக் கொள்கின்றார். (24)

# வாகரை அபிவிருத்தி தொடர்பாக நிறுவனங்களுடன் கலந்துரையாடல்

வாகரைப் பிரதேசத்தில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வரும் அரசசார்பற்ற நிறுவனங்களுடனான கலந்துரையாடல் கடந்த திங்களன்று பிரதேச செயலாளர் எஸ்.கிரிதரன் தலைமையில் இடம்பெற்றது. வாகரைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்தில் 10இற்கும் மேற்பட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். இதில் நிறுவனங்களின் செயற்றிட்டங்கள் பற்றி ஆராயப்பட்டது. அதாவது சுனாமி மீள்கட்டு மானப்பணியில் தற்காலிக வீடு, நிரந்தர வீடு அமைப்பது தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டு முடிவு எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இடதுசாரிகள் இனவாதிகளின் காலடியில் பிளவுபடும் அவல நிலையில் நாடு

**2004** ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலின் பொழுதும் தற்பொழுது நடக்கும் சனாதிபதித் தேர்தலின் பொழுதும் இனவாதமும் மதவாதமும் ஆதிக்கம் செலுத்துகின்றபடியால் நாட்டின் எதிர்காலம் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளது. தமது நாட்டின் ஆதிக்கமும் வெளிநாட்டு ஆதிக்கங்களுக்கு இடையில் தற்பொழுது நடக்கும் போட்டியினால் சிங்கள சமூகம் அரசியல் ரீதியில் இரண்டாக பிளவு பட்டுள்ளது. இன்று தேசிய ஆதிக்கத்தின் தலைவராக மகிந்த ராஜபக்ஷவும், அவருடன் இணைந்துள்ள இனவாதிகளும் செயற்படுகின்றனர். வெளிநாட்டு ஆதிக்கத்திற்கு ரணில்



விக்கிரமசிங்கவும் அவருடன் இணைந்த ஐக்கிய தேசிய கட்சியின் பிரமுகர்களும் செயற்படுகின்றனர். இன்று தேசிய இனவாதிகளாக மகிந்த ராஜபக்ஷவும், ஜே.வி.பியும் இணைந்துள்ளபடியால் இந்த

> **பேச்சுவார்த்தை மூலமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண புலிகள் யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளனர். இது நிறைவேறாவிட்டால் மீண்டும் ஆயுதம் ஏந்திப்போராடுவதில் தவறு இருக்கமுடியாது. இதுபடிப்படியாக நடந்துவருகின்றது.**

இனவாதம் மேலும் வலுவடையும் இதைத் தடுப்பதும் மிகக் கடினமான விடயமாகும்.

சிங்கள பௌத்தம் தேசிய இனவாதமாகும். இந்தநாட்டில் சிங்கள பௌத்த இனவாதம் தற்பொழுது ஆட்சி புரிகின்றது. ஆகவே இந் நாட்டில் வாழும் ஏனைய சிறுபான்மை இனத்தவர்கள்இவர்களுக்கு அடிமையாக வாழ வேண்டும் என்பதே இவர்களின் முழு நோக்கமாக உள்ளது. இலங்கை சிங்கள பௌத்த நாடு என்றபடியால் சிங்கள மக்களுக்கு அடிமையாக தமிழர்கள் வாழ வேண்டும் என்பதே இந்தப் பேரினவாதத்தின் நோக்கமாகும்.ஆகவே இது சிங்கள பேரினவாத நாடாகும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆகவே இந்த நாட்டையும் பேரினவாத அரசையும் காப்பாற்றுவது பௌத்தர்களின் கடமையாகும், இந்த பேரினவாதம் நாட்டில் நீடித்திருக்க வேண்டும். அப்படி நீடித்தால் இந்த நாட்டின் சிறுபான்மை இனத்தை இரண்டாம் பிரஜையாக கணித்து இவர்களை சர்வகாலமும் அடிமைகளாக வைத்திருக்க வேண்டும் என்பதே பௌத்தத்தின் முழுநோக்கமாகவுள்ளது.

சுதந்திர இலங்கையின் பௌத்த இனவாதத்தின் மேலாதிக்கம் ஆதிக்கம் செலுத்துகின்றபடியால் நாட்டில் இனப் பிரச்சினை ஏற்பட்டுள்ளதென்பதை எவரும் மறுக்க முடியாது. சிங்கள மேலாதிக்கத்தால் சிறுபான்மையினருக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் என்ன ?அதாவது கொழும்பு வாழ் சிறுபான்மையினருக்கு பிரச்சினைகள் கிடையாது. ஏனெனில் இவர்கள் பரம்பரையாக சிங்களவர்கள் மத்தியில் வாழ்கின்றபடியால் எந்த பிரச்சினைகளும் இவர்களுக்கு கிடையாது என்பதே இவர்களின் கணிப்பீடு. ஆனால் வடக்குகிழக்கில் வாழும் சிறுபான்மை தமிழர்களே பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துள்ளனர். வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்களின் பிரதிநிதிகளுக்கு அரச இயந்திரத்தில் இணைந்து செயற்படும் அதிகாரங்கள் மறுக்கப்பட்டுள்ளபடியால், வடக்கு கிழக்கு அபிவிருத்திகள் யாவும் சீர்குலைந்துள்ளன. சுனாமி பேரழிவு கட்டமைப்பு இதற்கு சிறந்த உதாரணமாகும்.

சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு புனரமைப்பிற்கு சிங்கள பேரினவாதம் ஏற்படுத்திய தடையால் முழுவடக்கு கிழக்கும் பாதிக்கப்பட்டுள்ளது. எல்லா அதிகாரங்களும் சிங்கள பௌத்த பீடத்தின் கீழ் செயற்பட வேண்டும் என்பதே இவர்களின் முழு நோக்கமாகவுள்ளது.

இலங்கை ஒற்றையாட்சி முறையை கடைப்பிடிப்பதால் இன்று நாடு இரண்டாக பிளவு பட்டுள்ளது. ஒற்றையாட்சி முறை சம்பந்தமாக மகிந்த சிந்தனையில் விளக்கம் இல்லாத படியால், அவரின் சிந்தனைகள் யாவும் துரதிஷ்டமானவைகளாக கருதப்படல் வேண்டும். இருபது வருடகாலமாக ஒற்றையாட்சி முறையால் இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடியதை மகிந்த சிந்தனைகள் ஏன் இதற்கு விளக்கம் அளிக்கவில்லை.

சமூகத்தின் குறைபாடுகளை உணர்ந்து அதற்கு ஏற்படி அரசியலை நகர்த்துவதே ஒரு இராஜதந்திரியின் விசேட அம்சமாகும். ஒற்றையாட்சிமுறையில் நாட்டை மறுசீரமைக்க முடியாது. இதை மறுசீரமைப்பதற்கு இந்த நாட்டின் இனவாதம் ஒருபோதும் இடமளிக்கமாட்டாது. இது இந்த நாட்டின் தலைவிதி ஆகும். இன்று தேசிய எழுச்சி சம்பந்தமாக முன்னைய இடது சாரிகள் என லங்காசமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி நாட்டின் தொழிலாளர் வர்க்கத்தை வலதுசாரிகளுக்கு காட்டிக் கொடுத்து பதவிக்காக கட்சிகளிலும் தொங்கிக்கொண்டு இப்பொழுது நாட்டைப் பற்றியும் தொழிலாளர்வர்க்கத்தை பற்றியும் முதலைக்கண்ணீர் வடிப்பதில் எந்த பிரயோசனமும் கிடையாது. இவர்கள் மாக்சியலெனினிச வாதத்தை உடுத்திக் கொண்டவர்கள். ஜே.வி.பி முழு இனவாதத்தை பூசிக்கொண்டு இன்று நாட்டின் சரித்திரத்தையே மாற்றி அமைப்பதில் ஈடுபட்டவண்ணமுள்ளது.ஆகவே நாட்டின் இனப்பிரச்சினை சம்பந்தமாக இதுவரை காலமும் மாறாத மார்க்சியவாத இனவாதகொள்கையை கடைப்பிடித்து வந்த வாசுதேவநாணயக்கார இனவாத கிடங்கில் விழுந்து கொண்டு தத்தளிப்பதைப்பார்த்து நாங்கள் வேதனைப்படுகின்றோம். ஒரு இடது சாரிக்கு இன,மதங்கள், நாடுகள் கிடையாது அவர்களுக்கு நசுக்கப்பட்டுள்ள ஏழை மக்களே தோழர்கள். இவர்களின் விடிவுக்காகவே ஒரு மார்க்சியவாதி போராட வேண்டும்.

இன்று இந்த நாட்டின் இடது சாரிகள் ஏழைமக்கள் பற்றி கதைப்பது கிடையாது அவர்கள் நாட்டைப்பற்றியும் மதத்தைப் பற்றியுமே கதைக்கின்றார்கள் மாக்ஸ், எ[illegible]ஸ் இருவரின் கொள்கைப்படி 1848 ஆம் ஆண்டு சகல பாதிக்கப்பட்டவர்களும் ஒன்று கூடுங்கள் என்பதை வலியுறுத்தியுள்ளது. இன்று இந்த நாட்டின் இடது சாரிகள் இனவாதிகளே ஒன்று கூட்டுங்கள் என்று பெரும் கோசத்தை எழுப்பிய வண்ணமுள்ளன. பாதிக்கப்பட்ட சிறுபான்மை இனங்கள் சர்வதேசத்தின் சொத்துக்கள் என்பதை மார்க்ஸ் என்கல்ஸ் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. ஆனால் இந்த நாட்டின் மார்க்சியவாதிகள் அனைவரும் இனவாத கும்பல்கள் என்பது நிருபணமாகியுள்ளது இவர்கள் இப்பொழுது மார்க்சிய வாதத்தை விலை பேசி தற்பொழுது வலது சாரி தனவந்தர்களாக இருக்கின்றனர். இன்று சிங்களநாட்டின் தனவந்தர்களும் இந் நாட்டின் எளிய சிங்கள குடிமகனும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள்.ஆனால் இந்த நாட்டின் ஒரே இனத்தை சேர்ந்தவர்கள் அதே இனத்தை காலடியில் போட்டு மிதிக்கும் பொழுது இந்த நாட்டின்சிறுபான்மையினரின் கதி என்ன என்பதை நாம் சிந்திக்க வேண்டும். இன்று லங்கா சமசமாஜ கட்சி இலங்கை கமயூனிஸ்ட் கட்சி, ஜே.வி.பி, வாசுதேவ நாணயக்கார போன்றபெரும் இடது சாரிகள் அனைவரும் சிங்கள இனவாத தனவந்தர்களின் காலடியில் விழுந்து கிடக்கும் அவலநிலையில் நாடுபிளவுபடும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே வடக்குகிழக்கில் விடுதலைப் புலிகள் இந்த இடது சாரிகளை

தூக்கி எறிந்துவிட்டு தங்களின் சுயநிர்ணய உரிமைக்காக போராடுவதில் நியாய இருக்கிறது.

இந்த யுகத்தின் இலங்கை நாட்டிற்கு உள்ள முக்கிய பிரச்சினை என்வென்றால் தற்பொழுது பிரிந்துள்ள வடக்கு கிழக்கை தென்பகுதி அரசுடன் இணைப்பதேயாகும். ஒற்றையாட்சியின் கீழ் இது சாத்தியமாகுமா? இதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன? தற்பொழுது பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேரடியாக பிரபாகரன் அவர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தப்போவதாக கூறுகின்றார் இந்தப் பேச்சுவார்த்தைகள் வெற்றி அடையுமா? ஒற்றையாட்சிமுறையை அவர் ஏற்றுக்கொள்வாரா? டக்ளஸ் தேவானந்தாவை கூட ராஜபக்ஷவுக்கு ஒற்றையாட்சி நடைமுறைக்கு சம்மதிக்க வைக்க முடியாது.

இவர் எப்படி பிரபாகரன் அவர்களை ஒற்றையாட்சி முறைக்கு சம்மதிக்க வைப்பார். இங்குள்ள மார்க்ஸ், லெனின் வாதிகளைப் போல் பிரபாகரன் அவர்களை ராஜபக்ஷ எடைபோட்டுள்ளார். புலிகளுக்கு என்று தனிக் கொள்கையும் கட்டமைப்பும் உண்டு. இதில் இருந்து விலகமாட்டார்கள் ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி ஆகிய இரண்டு கட்சிகளும் புலிகள் ஆயுதங்களை கீழே வைத்த பிறகுதான் பேச்சு வார்த்தை நடத்தமுடியும் என கூறுகின்றனர். அப்படி இல்லை என்றால் இராணுவ ரீதியில் புலிகளை தோற்கடிக்க வேண்டும். இந்த யுகத்தில்இது நடக்க கூடியகாரியமா? மகிந்த ராஜபக்ஷ சனாதிபதியானால் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்தி யுத்தத்திற்கு முடிவுகட்ட வேண்டும். அப்படி இல்லைஎன்றால் யுத்தத்தை ஆரம்பிப்பதைத் தவிர வேறு மார்க்கம் ராஜபக்ஷவுக்கு கிடையாது. அப்படி என்றால் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை யுத்தமும் சமாதானமும் இல்லாத ஏமாற்று விந்தையை ராஜபக்ஷ நடத்த முயற்சிக்கின்றாரா? இவற்றை எல்லாம் தமிழ் மக்கள் கைகளைக் கட்டிக்கொண்டு பார்த்துக் கொண்டு இருப்பார்களா? தேசிய இனப்பிரச் சினையை எவ்வளவு காலத்திற்கு இழுத் தடிக்க முடியும்? சமாதானப் பேச்சுவார்த் தைகளை முன்னெடுத்துச் செல்லாதபடியால் வடக்கு கிழக்கு மிகமோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இதற்கு அரசாங்கம் முழு பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் புலிகள் கைச்சாத்திட்டுள்ளனர். இவை நிறைவேறாவிட்டால் புலிகள் மீண்டும் ஆயுதம் ஏந்திப் போராடுவதில் தவறு இருக்க முடியாது. அது படிப்படியாக நடந்தவண்ணமுள்ளது. எனவே, பேச்சுவார்த்தைகளை உடன் ஆரம்பிப்பது மிக அவசியம். ஆகவே புதிய சனாதிபதி உடனடியாக மீண்டும் சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும்.

இந்த நாட்டின் இரண்டு சனாதிபதி வேட்பாளர்களும் நல்ல அரசியல்ஞானம் படைத்தவர்கள். இவர்கள் முன்வைத்துள்ள திட்டங்கள் புதிய லிபரல் பொருளாதார கொள்கையாகும். இதை ரணில் விக்கிரமசிங்க நேர்மையுடன் வெளிப்படுத்தி உள்ளார். ஆனால் ராஜபக்ஷ இதை இன்னும் வெளியிடவில்லை ராஜபக்ஷவுடன் இணைந்துள்ள ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய இரண்டு கட்சிகளும் இக்கொள்கைக்கு எதிரானவர்கள் .ஆனால் எமது நாடு பொருளாதார ரீதியில் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளபடியால் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வணிக அமைப்புகளின் உதவிகள் இல்லாமல் இவர்களுக்கு இந்த நாட்டில் எதுவும் செய்ய முடியாது. 2004 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த சந்திரிகா உலக வங்கியின் "பிளக்"கை இதுவரை அகற்ற முடியாமல் திண்டாடிக் கொண்டு இருக்கின்றார் இந்தியாபோன்ற பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைந்த நாடுகள் கூட இன்று உலக வங்கியின் ஆதரவு இல்லாமல் எதையும் செய்ய முடியாத நிலையில் உள்ளன. ஆகவே மகிந்த ராஜபக்ஷவின் சிந்தனை இந்தநாட்டு மக்களை ஏமாற்றும் ஒருவித்தையாகும். ஆகவே ரணில் விக்கிரமசிங்கவின் லிபரல் பொருளாதார கொள்கையை மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக் கொள்ள வேண்டும் இல்லையேல் அவர் ஒரு ஏமாற்றுப் பேர்வழி என்பதே எனது கருத்தாகும்.

இந்த நாட்டின் இனப்பிரச்சினை சம்பந்தமாக மகிந்த ராஜபக்ஷவுக்கோ இல்லையேல் அவருடன் இணைந்திருக்கும் மற்றக்கட்சிக்காரர்களுக்கோ சனநாயக நடைமுறைகள் கிடையாது. மகிந்த ராஜபக்ஷ அவர்கள் சனநாயக ரீதியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு எடுத்தாலும் அவருடன் இணைந்திருக்கும் ஜே.வி.பி ஜாதிக ஹெல உறுமய ஆகியன இதற்கு இடம் கொடுக்க மாட்ட. இதுவரைக்கும் தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமாக தெளிவான கருத்துக்களை மகிந்தராஜபக்ஷ ஜே.வி.பி, ஜாதிகஹெலஉறுமய நாட்டு மக்களுக்கு முன்வைக்கவில்லை. அடுத்து ஜாதிக ஹெலஉறுமய இந்த நாட்டில் இனப்பிரச்சினை என்பது கிடையாது என அறிக்கை

*லங்காதீப சிங்கள நாளிதழ்*
*ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக அரசியல் பீடவிரிவுரையாளர் டெரன்ஸ்புரசிங்க*
*மொழியாக்கம் அ. சக்திவேல்*

விட்டுள்ளது இந்த விரோத கொள்கை உடையவர்களுடன் ராஜபக்ஷ சிக்கிக் கொண்டுள்ள ஒரு அப்பாவி அரசியல்வாதி என்பதே எனது கருத்தாகும். இதுவரை மகிந்தராஜபக்ஷ தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமாக தெளிவான கொள்கையை முன்வைக்க வில்லை. ஆகவே இந்த நாட்டின் இனப்பிரச்சினை சம்பந்தமாக தெளிவான கருத்துக்களை முன்வைப்பது அவரின் கடமையாகும். அப்படி அவர் செய்யா விட்டால் அவர் ஒரு ஏமாற்றுப் பேர்வழி என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும்.

# செயற்கை முறைசினைப்படுத்தலும் கால்நடை வளர்ப்பும்

வன்னிவாழ மக்களின் பொருளாதாரத்தில் சமபங்கை வகிக்கும் கால்நடைகள் வளர்ச்சி இரண்டு தசாப்தங்களில் ஏற்பட்ட போரினால் பாதிப்படைந்து குறிப்பிடத்தக்களவு அழிந்தாலும் கணிசமான அளவு கால்நடைகள் (கிட்டத்தட்ட ஒன்றரை இலட்சம் மாடுகளும் நாற்பதாயிரம் ஆடுகளும்,) உள்ளன.

இந்த மாடுகள் யுத்த காலத்தில் விவசாய செய்கைக்கு உழவு, வண்டில், சூடடிப்பு என்பவற்றுக்கு பெரும் உதவியாய் இருந்ததும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ஆனால் மக்களின் உணவுத் தேவைக்கு ஏற்ப பால், இறைச்சி அதிகம் தரக்கூடிய நல்லின மாடுகளோ ஆடுகளோ இல்லை. இதனை நிவர்த்தி செய்ய எமது பிரதேச கால நிலைக்கு ஏற்ப வளரக்கூடிய,அதிகம்



பால் இறைச்சிதரக் கூடிய நல்லின மாடுகள், ஆடுகள் பெறமுயற்சிகள் மேற்கொள்ளப் பட்டது. ஆனால் இம்முயற்சிகளினால் பெரும் பண விரயம், பராமரிப்பு செலவீனம் அதிகம் என்பதால் செயற்கை முறை சினைப்படுத்தல் முறை அறிமுகப் படுத்தப்பட்டது.

செயற்கை முறை சினைப்படுத்தல் (Artificial Insemination) என்பது தொழில் நுட்ப ரீதியில் ஆண் விலங்குகளிலிருந்து சுக்கிலம் (Semen) சேகரிக்கப்பட்டு விரிவாக்கல் பதார்த்தம் கலக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு பெண் விலங்கின் வேட்கை காலத்தில் பெண் இனப்பெருக்கத் தொகுதியினுள் விசேட உபகரணம் மூலம் செலுத்துவதேயாகும் இச் செயற்பாட்டை எமது உள்ளூர் இனங்களுக்கு செயற்படுத்துவதால் இரண்டாவது மூன்றாவது சந்ததியின் நல்லினத்தை பெற்று விடமுடியும்.

இந்த செயற்கை முறை சினைப்படுத்தலானது முதன்முதலாக 1937 ஆம் ஆண்டு பேராதனை பண்ணையில் அறிமுகப்படுத்தப்பட்டு 1952 இல் குண்டசாலை பொலநறுவை, திருநெல்வேலி போன்ற இடங்களில் நிலையங்கள் நிறுவப்பட்டு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட காளைகளான ஜேர்சி (Jersey) பீரிசியன் (Friesian),சகிவால் (Sahiwal) போன்றவையும் கடாக்களான யமுனாபாரி (Jamunapary), சாணன் (Sanwn), போயர் (Boer) போன்றவைகளை பராமரித்து சுக்கிலம் (Semen) பெறப்பட்டுஒவ்வொரு கால்நடைவைத்திய நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டது வன்னிக்கு தொடருந்து மூலம் 1980 களில் கொண்டு வரப்பட்டு செய்யப்பட்டது பின்னர் யுத்தத்தால் தடைப்பட்டது.

2003 சனவரியில் கிளிநொச்சியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டது.

இச் செயற்கை முறைசினைப்படுத்தல் சுக்கிலம் சேகரிக்கப்பட்டு இரண்டு முறைகளில் பாதுகாக்கப்படுகின்றது. 01.)உறையப் படுத்தப்பட்ட சுக்கிலம் (Deepfrozen semen) உயர் தொழில் நுட்ப முறையின் மூலம் திரவ நைதரசனின் (Liquid nitrogen) பாதுகாக்கப்படுகின்றது இவ்வகை சுக்கிலமானது பலவருடங் களிற்கு பாவிக்க முடியும் ஒரு நல்லின காளை இறப்பினும் அதன் சுக்கிலத்தை நீண்ட காலத்திற்கு வைத்திருப்பதோடு சேகரிக்கப்பட்ட சுக்கிலமும் வீண் விரை யமடைய மாட்டாது ஆனால் திரவ நைதரசன் (Liquid nitrogen) அளவு குறைந்தால் பழுதடைந்து உயிரணு இறந்துவிடும். சீரற்ற பாதையில் கொண்டு சென்றால் பாதிப் புக்கள் ஏற்படும், அத்தோடு இச் சேவையினை மேற்கொள்ள பெரிய பதார் த்தம் ஒன்றை முதுகில் தாங்கி செல்ல வேண்டும் இதன் பெறுபேறும் நாற்பது தொடக்கம் நாற்பத்தைந்து வீதமே வெற்றியளிக்கின்றது. போர் நடந்தால் தடைப்படும்.

ஆகவே இதன் செயற்பாடு எமது பிரதேசத்திற்கு தற்போது சரிவராது 02.)குளிரூட்டப் பட்ட சுக்கிலம் (Chilled semen) இது சாதாரண குளிர்சாதனப் பெட்டியில் 4°C வெப்பநிலை தொடக்கம் 8°C வெப்பம் நிலையில் களஞ்சியப்படுத்தப் படுகின்றது. ஆனால் இச் சுக்கிலம் குளிர்சாதனப் பெட்டியில் மூன்று நாட்கள் மட்டுமே இருக்கும் இதன் உயிர் அணுக்கள் இறந்து விடுவதால் மூன்று நாளுக்கு ஒருதடவை சேகரிக்கப்படுகின்றது.

வாரத்தில் திங்கள் புதன், வெள்ளி ஆகிய நாட்களில் இச்செயற்பாடு யாழ். திருநெல்வேலியிலும், கிளிநொச்சியிலுமே சேகரிக்கப்பட்டு கால்நடை வைத்திய நிலையங்களுக்கு வழங்கப்படுகின்றது.இது அறுபத்தைந்து வீதம் வெற்றியளிக்கின்றது. போர் நடந்தாலும் இங்கு உற்பத்தி செய்ய முடியும்.

செயற்கை முறைச்சினைப்படுத்தல் மூலம் மேலும் பல நன்மைகளை நோக்கின் பெண் விலங்கை ஆண்விலங்கு உள்ள இடத்திற்கு கொண்டு செல்லத்தேவையில்லை உறுதிப் படுத்தப்பட்ட நோயற்ற சுக்கிலம், பெண் விலங்கு அடிக்கடி பரீட்சிக்கப்படும், பண்ணையாளர் ஒரு நிரந்தர பதிவேட்டை வைத்திருப்பார்.

தீமையை நோக்கின் பண்ணையாளர் பெண்விலங்கின் வேட்கையை அவதானிக்காமல் விட்டால் சினைப்படும் காலத்திலிருந்து ஒரு மாத காலம் பின்நோக்கிச் செல்லும், சுக்கிலம் சேகரிக்கப்படும் நிலையங்களில் சிறு தவறு ஏற்படுமானால் அன்று உற்பத்தி செய்யப்பட்ட சுக்கிலங்களின் பெறுபேறுகள் பூச்சிய செயற்பாட்டையே காட்டும்.

வன்னியில் இதன் செயற்பாடு 1980 களில் செயற்பட்டது ஆனால் 2003 சனவரி முதல் கிளிநொச்சியில் இருந்து பெறப்படும் சாதாரண குளிரூட்டல் சுக்கிலமே (Chilled Semen) பூநகரி , துணுக்காய், வட்டக்கச்சி, கிளிநொச்சி, விசுவமடு, ஒட்டுசுட்டான் ஆகிய இடங்களுக்கு பிரத்தியேக கால்நடைவைத்திய நிலையங்கள் என்பனவற்றுக்கு வழங்கப்படுகின்றது. இச் சுக்கிலம் சேகரிக்கும் நிலையம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் காராளி செயற்கை முறை சினைப்படுத்தல் நிலையம் என ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு 2004 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவு மூலப் பொருட்களை ஐக்கியநாடுகள் அபிவிருத்தி திட்டம் பொருண்மிய மதியுரையகதினூடாக வழங்கியது. பின்னர் மாதாந்த செலவாக ஒரு இலட்சம் வரை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமே வழங்கி வருகின்றது.

இத்திட்டத்தில் மாதாந்தம் 480 காளை சுக்கில குப்பிகளும் 360 கடா சுக்கிலகுப்பிகளும் தயாரிக்கப்பட்டு விநியோகப் படுத்தப்படுகின்றது.ஆனால் செயற்கை முறைசினைப்படுத்தல் சேவை மாதத்தில் ஆடு, மாடு என 150 வரைமட்டும் செய்யப்படுகின்றது இதனடிப்படையில் பார்த்தால் ஒரு சுக்கில குப்பியின் பெறுமதி அறுநூற்று அறுபத்தாறு ரூபாவுக்கு அதிகமாக செலவாகின்றது.

இச்சேவை குறைவுக்கான காரணங்களை ஆராய்ந்தால் பல காரணங்கள் கூறப் படுகின்றது அவையாவன நாள் ஒன்றுக்கு 40காளை சுக்கிலமும், 30 கடா சுக்கிலமும் உற்பத்தி செய்தால் முழுவதும் அன்றோ அல்லது அடுத்தநாளோ பெண் விலங்குகளுக்கு செயற்கை முறைச்சினைப்படுத்தல் சேவை மேற்கொள்ள முடியாது. ஏனெனில் வேட்கை உள்ள பெண்விலங்கு ஆகியவற்றை கண்டமக்கள் உடன் வந்து தொழில் நுட்பவியலாளரை நாடாமை அதிகதூரம்



என்பதால் போக்குவரவு, தொடர்பாடல் வசதி இல்லாமை, கால்நடை போதனாசிரியர் பற்றாக்குறை, பிரத்தியேக தொழில் நுட்பவியலாளர் பற்றாக்குறை, மக்கள் மத்தியில் இன்னும் விழிப்புணர்வு தன்மை ஏற்படாமை, ஆண்மை நீக்க (நலமடித்தல்) செயற்பாட்டை ஊக்குவிக்காமை, சினைப் படுத்திய பசுவை சீராக பராமரிக்காமை, கருச்சிதைவு நோய் கட்டுப்படுத்தலை மேற் கொள்ளாமை, பிறந்த கன்று பராமரித்தல் போன்றமை போன்ற காரணங்களினால் சினைப்படுத்தல் சேவை வன்னியில் மிக குறைவாகவே காணப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட காரணங்களுள் முல்லை மாவட்டத்திற்கு ஐந்து பிரதேச செயலர் பிரிவுக்கும் ஏற்ற வகையில் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்களை நியமித்தமை போன்று கிளிநொச்சி, வவுனியா வடக்கு பகுதிகளிலும் இப்பற்றாக்குறையாக உள்ள கால்நடை போதனாசிரியர்களை நியமிப்பதோடு பிரத்தியேகதொழில் நுட்பவியலாளர்களை பயிற்றுவிக்கவேண்டும் மக்கள் மத்தியில் சில மூட நம்பிக்கைகளை களைந்துவிழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு ஊக்குவிப்புநடவடிக்கைகளை அதிகரித்தல்



சந்தை வாய்ப்பை மையப்படுத்தல், நிவர்த்திசெய்ய அனைவரும் சேவை மனப்பான்மையுடன் செயற்படவேண்டும் செயற்பட்டால் துரிதகதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் பால்பொருள் உற்பத்தி சாலைக்கு ஏற்ற வகையில் அதிக பாலை வழங்க ஒத்துழைக்கமுடியும்.

ப. பி. கவியரசன் ஒட்டுசுட்டான் செய்தியாளர்.

# தேசிய சூழல் மேம்பாட்டு வாரம் நவம்பர் 14–20

தேசியத்தின் அடிப்படையில் தனித்தான பண்புகளைக் கொண்டதால் எமது தாயகத்தினை தமிழீழம் என்கிறோம். அறிவியலடிப்படையிலும் எமது தாயகம் தனித்தான பௌதீக பண்புகளைக் கொண்டது. அதனால் இதுவொரு தனித்தான சூழ்நிலைத் தொகுதி (Eco-System) என அழைக்கப்படுகின்றது. வரையறுக்கப்பட்ட இத் தொகுதியில் எமக்கேயுரித்தான விசேடமானவை உட்பட, வாழும் அனைத்து உயிரினங்களும், தாவரங்களும், நுண்ணுயிர்களும் (உயிரற்றவை உட்பட) ஒன்றோடொன்று தங்கி வாழ்கின்றன. நீர்நிலை சூழ்நிலைத் தொகுதியும் இதனுள் அடக்கம். மனிதனும் இதனுள் அடக்கமே. எனவே பொருத்தமான வலைப்பின்னல் போல சங்கிலி இழைகள் போல இவையாவும் அமைந்து பௌதிக சூழலில் வாழ்வது இயற்கையின் சமநிலை என[illegible]

ஆனால் தொழில்நுட்ப வளர்ச்சியால், அதாவது அறிவுமிகுந்தவனாகக் காட்டிக் கொள்ளும் மனிதன் " உலகைப்பிறந்தது எனக்காக"என வாழத் தொடங்கி அதிகரிக்கும் தனது தேவைகளுக்காக இயற்கையின் வளங்களை மிகையாக சுரண்டத் தொடங்கிய பின்னர் எல்லாமே பிழைத்துப் போகத் தொடங்கின. குடியிருப்பால், வேளாண்மையால், வேதியல் பொருட்பயன்பாட்டால், காடழிப்பால், மண்ணரிப்பால், மண் நிரப்பலால், நல்ல நீர், வளி மாசடையச் செய்யும் தொழிற்பாட்டால் என மிக நீளும் இப்பட்டியலால், மனிதன் உயிரினங்களினதும், நுண்ணுயிர்களினதும் இனப் படுகொலைக்கும், அகதிகளாக இடம்பெயர்ந்து இவை சீரழியவும், தான் வழிவகுத்தது பற்றி அவன் ஒரு போதும் எண்ணுவது கிடையாது.

ஆனால் இப்போது கதை மாறிவிட்டது. இயற்கை மனிதனை ஏனைய உயிரினங்கள் போலவே கணித்து அவனது செயற்பாடுகளுக்காக அவனைத்தண்டிக்க தொடங்கி விட்டது. மனிதனது செயற்பாட்டின் பக்க விளைவுகளால் மனிதனே வாழமுடியாத சூழலை அவனே உருவாக்கிவிட்டான்.

இதனைக் கருத்திற்கொண்டே எமது தாயகத்தில் முதற்கட்ட முதன்மைப் பணியாக திண்ம, திரவக்கழிவகற்றல் பணி இவ் வாரத்தில் நடைபெறுகின்றது. ஏனெனில் எமது தாயகத்தில் உயிரினங்கள் தோன்றவும், வளரவும், மறையவும், மறைந்தவை மண்ணோடு மண்ணாகவும், இயற்கை இங்கே ஏற்பாடுகளைச் செய்துள்ளது. மறைந்தவற்றை மக்க, உக்க செய்ய மண்ணாக்கும் பணிக்காக மண்ணில் பக்றீரியாக்கள் எனப்படும் நுண்ணுயிர்கள் செயற்படுகின்றன. எனவே எமது தாயகத்தில் இச் செயற்பாட்டிற்கு தடையாக உள்ளவற்றை நீக்க வேண்டிய நிலையில் நாமுள்ளோம்.

இவ்வகையில் திண்ம, திரவக்கழிவகற்றல் செயற்பாடு முக்கியத்துவம் பெறுகின்றது. குறிப்பாக பொலித்தீன் போன்ற உக்க முடியாதவற்றை அகற்றி எம் தாயகத்தின் ஆரோக்கியத்தைக் காப்பாற்றிட, அனைவரும் இணைந்து பணியாற்ற இப்புனிதமான மாவீரர் நாட்களில் உங்களை அழைக்கின்றோம். பின்வரும் அறிஞர் ஒருவரின் கருத்தினை உங்கள்முன்வைக்கிறோம்." மரம், செடிகொடிகளை விட மனித இனத்தையே இயற்கை நேசிக்கின்றது என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. ஆயிரக்கணக்கான உயிர்கள் நம்கண் முன்னால் அழிவது போல நாமும் ஒரு நாள் வேகமாக மறைந்து போகலாம். இயற்கை எல்லோரையும் ஒரே மாதிரித்தான் பார்க்கின்றது. இயற்கையின் சமநிலை பாதிக்கப்படும் பொழுதெல்லாம் அச்சமநிலையை என்ன விலை கொடுத்தும் மீட்க இயற்கை ஆயத்தமாகின்றது. நம்மால் அதற்கு ஆபத்து நேருமானால் இயற்கை நம்மைத் திருப்பித் தாக்கும்.எனவே இந்நிலை எமக்கு ஏற்படாமல் சூழலைத் தூய்மைப் படுத்தி இயற்கை சமநிலையைக் காத்திடு வோம்.எம் மாவீரரால் புனிதமான எம் தாயகத்தினை எம்பணிகளால் தூய்மைப்படுத்துவோம்.

-சூழல்நல்லாட்சி ஆணையம்.

## இராணுவத்திலிருந்து ஓடியோர் சட்ட ரீதியில்விலக மீண்டும் சந்தர்ப்பம்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தை விட்டு சென்றவர்களுக்கு சட்டரீதியாக விலகுவதற்கு மீண்டும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

2003 ஆண்டு சனவரி மாதம் எட்டாம் திகதிக்கு முன் இராணுவத்தை விட்டு சென்றவர்கள் என அறிவிக்கப்பட்டவர்களுக்கே இந்தச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக நடவடிக்கை தலைமையகம் தெரிவித்தது.

நாட்டின் சகல பகுதிகளும் உள்ளடக்கப்படும் வகையில் பனாகொடை இராணுவ முகாமில் விசேட மையம் அமைக்கப்பட்டுள்ளது.எதிர்வரும் டிசம்பர் ஐந்தாம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை இந்தச் சந்தர்ப்பம் வழங்கப்படுமென பதில் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.எதிர்வரும் 21ஆம் திகதி முதல் இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றவர்களின் பெயர்ப் பட்டியல்கள் மாவட்ட செயலகங்களில் காட்சிக்கு வைக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (32)

## இறுதி அமைச்சரவைக் கூட்டங்கள் சனாதிபதி சந்திரிகாவினால் இரத்து

சிறிலங்கா சனாதிபதி பொறுப்புடன் சந்திரிகா குமாரதுங்க நேற்று முன்தினம் நடத்த இருந்த இறுதி அமைச்சரவைக் கூட்டம் திடீரென இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

சந்திரிகா குமாரதுங்கவுக்குப் பிரியாவிடை அளித்து வழியனுப்பக் காத்திருந்த அமைச்சர்களுக்கு இது பெரும் ஏமாற்றமாகிவிட்டதாகக் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

இருப்பினும் சனாதிபதித் தேர்தல் வாக்களிப்புக்குப்பின் இந்த அமைச்சரவைக் கூட்டத்தைச் சந்திரிகா கூட்டக் கூடும் என்றும் கூறப்படுகிறது.

கடந்த இருவாரங்களாக மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்து சந்திரிகாவும் அவரது சகோதரர் அநுராவும் எந்தப் பொதுக் கூட்டங்களிலும் உரையாற்றாத நிலையில் நாட்டு மக்களுக்கு சந்திரிகா ஆற்றவுள்ள இறுதி சனாதிபதி உரை குறித்துயூகங்கள் எழுந்துள்ளன.தனது இறுதி உரையில் மகிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பி. மீது கடுமையான விமர்சனங்களை சந்திரிகா முன்வைக்கக்கூடும் என்றும் கூறப்படுகிறது.

# அனைத்துத் தரப்பினரும் அமைதிக்கு பாடுபட அமெரிக்க செனட் தீர்மானம்

***இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அனைத்துத் தரப்பினரும் பாடுபட வேண்டும் என்று அமெரிக்க செனட்டின் தீர்மானம் வலியுறுத்தியுள்ளது. அமெரிக்க செனட்டில் குடியரசுக் கட்சியின் செனட்டர் ஜோன் மைக்கெய்ன், சனநாயகக் கட்சியின் செனட்டர் ஜோசப் பைடென் ஜீனியர் ஆகியோர் இதற்கான தீர்மானத்தைக் கொண்டுவந்தனர்.***

அந்தத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளதாவது,

அமைதி முயற்சிகளில் சிறிலங்கா அரசாங்கம் துணிச்சலான முடிவுகளை மேற்கொள்ள வேண்டும். நாட்டின் மறுசீரமைப்புக்கும் அமைதி முயற்சிகளுக்குமான பேச்சுவார்த்தைகளுக்கும் அனைத்து சனநாயக சக்திகளும் பாடுபட வேண்டும். சிறிலங்காவில் நடைபெறவுள்ள சனநாயக ரீதியான தேர்தலுக்கு சர்வதேச நாடுகளும் தனியார் நிறுவனங்கள், அமைப்புகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

சிங்கள மற்றும் தமிழ் தீவிரவாத கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் சனநாயகத்தைக் கைவிட்ட நாடுகளும் தனியார் அமைப்புக்களும் நிதியுதவி செய்துவரும் விடயத்தில் அமெரிக்கா அவதானமாகவுள்ளது சனநாயகத்தைக் கைவிட்ட அந்நிய சக்திகளின் தலையீடு இல்லாமல் நேர்மையான தேர்தல் நவம்பர் 17 ஆம் நாள் நடைபெற வேண்டும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சனாதிபதித் தேர்தலை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஒழுங்குகள்!

எதிர்வரும் சிறிலங்கா சனாதிபதித் தேர்தலை முன்னிட்டு நேற்று முன்தினம் விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இந்தப்பாதுகாப்பு நடவடிக்கை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை செயற்படுத்தப்படுமென சிறிலங்காப்பொலிசார் தெரிவித்தனர்.

இதேவேளை தேர்தல் தினத்தன்று கொழும்பு நகரின் சில வீதிகள் முடப்படவுள்ளதாக கொழும்பு நகரப் பொலிசார் தெரிவித்தனர்.

இதற்கமைய இசிப்பத்தன மாவத்தையில் இருந்து டிக்மன் வீதி வரையும்,பார்க் வீதி ஹைலெவல் வீதியில் இருந்து அண்டர்சன் தொடர்மாடி வீடுகள் அமைந்துள்ள பிரதேசம் வரை மூடப்படுவதோடு பார்க் ஒழுங்கை லும்பினி கல்லூரி அருகாமை,புள்ளர்ஸ் வீதி, கிங்சி வீதி,கனத்தை சுற்று வட்டம், கிறகரிஸ் வீதி,விஜேராம வீதி,பௌத்தாலோக்க மாவத்தையின் சில வீதிகள் முடப்படுமென கொழும்பு நகர போக்குவரத்து பொலிசார் தெரிவித்தனர். (32)

## புலிகளின் பெயரில் போலி துண்டுப்பிரசுரம் விநியோகித்த இருவர் பிணையில் விடுதலை!

(மட்டக்களப்பு)

சனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு கோரி மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்த இருவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் இலச்சினையுடன் கூடிய துண்டுப் பிரசுரங்களுடன் கைது செய்யப்பட்ட இவர்கள் இருவரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அடையாள அட்டைகளையும் வைத்திருந்தனர்.

தகவல் ஒன்றின் அடிப்படையில் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள் இருவரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் அல்ல என்பது விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இவர்கள் மாற்று குழு ஒன்றின் உறுப்பினர்கள் என்றும் கிழக்கில் நடைபெறும் சனாதிபதித் தேர்தலைக் குழப்பும் நோக்கில் இவர்கள் செயற்பட்டதாகவும் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில் இவர்கள் இருவரும் பொலிசாரால் மட்டக்களப்பு நீதிமன்ற நீதவான் அஜ்மீர் முன்னிலையில் நேற்று முன்தினம் மாலை ஆஜர்செய்யப்பட்டபோது தலா பத்து ஆயிரம் ரூபா சரீர பிணையில் செல்ல அவர் அனுமதித்தார். (32)

## ரணிலின் தேர்தல் விஞ்ஞாபனம் நடைமுறைப்படுத்த சாத்தியமானது

### ஐக்கிய பல்கலை கலாநிதிகள் சங்கம் கருத்து

ஐக்கிய தேசியக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்திருக்கும் தேர்தல் விஞ்ஞாபனமானது நடைமுறைப்படுத்தக்கூடிய ஒன்றாகுமென ஐக்கிய பல்கலைக்கழக கலாநிதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துரைத்த அவர்கள், ரணில் விக்கிரமசிங்க சமர்பித்துள்ள தேர்தல் விஞ்ஞாபனமானது மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவுள்ளது.

இந்தநிலையில் சமாதானம் மற்றும் பொருளாதார அபிவிருத்திகளை ரணில் விக்கிரமசிங்கவினால் மாத்திரமே ஏற்படுத்த முடியும் .

மகிந்த ராஜபக்ஷ முன்வைத்துள்ள தேர்தல் விஞ்ஞாபனமானது நடைமுறைப்படுத்த முடியாதது எனத் தெரிவித்துள்ள அவர்கள், மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்துள்ள 25 கட்சிகளும் வெவ்வேறு நோக்கங்களை கொண்டிருப்பதால் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அவர் சனாதிபதியானால் அவரால் தமது திட்டங்களை முன்னெடுக்கமுடியாது எனச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

1977 ஆம் ஆண்டு அரசியலுக்கு பிரவேசித்த மகிந்த ராஜபக்ஷ தமது தொகுதியான அம்பாந்தோட்டைக்கு கூட உரிய சேவைகளை மேற்கொள்ள வில்லை. இந்த நிலையில் அந்த மாவட்டம் இன்று நாட்டில் இரண்டாவது வறுமையான மாவட்டமாகக் கருதப்படுவதாகவும்கலாநிதிகள் தெரிவித்துள்ளனர். (32)

## அரச அதிபரின் அனுமதியை மதிக்காது இராணுவம் கட்டடப் பொருட்களை எடுத்துச் செல்லத் தடை

### பா.உறுப்பினர் துரைரட்ணசிங்கம் சனாதிபதிக்குக் கடிதம்

மூதூர் கிழக்குப் பிரதேசத்திற்கு அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்ல சோதனைச் சாவடிகளில் சிறிலங்கா இராணுவத்தினர் தொடர்ந்து அனுமதி மறுத்து வருவது குறித்து சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா தலையிட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர்கே.துரைரட்ணசிங்கம் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக சந்திரிகாவுக்கு அவர் அனுப்பியுள்ள தொலைநகல் முறைப்பாட்டுக் கடிதத்தில்

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூதூர் கிழக்குப் பிரதேசத்துக்குக் கட்டுமானப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை அரச சார்பற்ற நிறுவனங்களும் இதர நிறுவனங்களும் எடுத்துச்செல்ல சிறிலங்கா அரசாங்கத்தின் திருமலை அரச அதிபர் அனுமதியளித்துள்ளார்.

ஆனாலீ கட்டைபறிச்சான், மகிந்தபுரம், ஈச்சிலம்பற்று ஆகிய இடங்களிலுள்ள சிறிலங்கா இராணுவச் சோதனைச் சாவடிகளில் அரச அதிபரின் உத்தரவை மதிக்காமல் இராணுவம் தொடர்ந்து அனுமதி மறுத்து வருகிறது.

யுத்தநிறுத்தமானது வெறும் வெள்ளைத்தாளில் மட்டுமே இருக்கிற நிலைமை திருகோணமலை மாவட்டத்தில் உருவாகி இருக்கிறது.

அத்தியாவசியப் பொருட்களான முட்டை, எரிபொருட்கள் ஆகியவற்றுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளன.

உழவு இயந்திரங்களுக்கான எரிபொருட்களை எடுத்துச் செல்ல இராணுவம் தடைவிதித்து இருப்பதால் விவசாய செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளன.

இது விடயத்தில் நீங்கள் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு வேண்டுகின்றோம் என்று துரைரட்ணசிங்கம் தமது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

## தேர்தல் வன்முறை கண்காணிப்பு மையம் அரச ஊடகங்கள் மீது அதிருப்தி!

(கொழும்பு)

இம் முறை சனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு, அரசாங்க ஊடகங்கள் செய்தி அறிக்கைகள் தொடர்பாகக் கடைபிடித்த கொள்கைகள் குறித்து திருப்தியடைய முடியாது எனத் தேர்தல் வன்முறைக் கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது.

எனினும் தனியார் ஊடகங்கள் நடுநிலையாகச் செய்திகளை வெளியிட்டதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

அரசாங்க ஊடகத்துடன் ஒப்பிடும் போது தனியார் ஊடகங்கள் உரிய இடத்தில் உள்ளதாக சுனந்த தேசப்பிரிய தெரிவித்தார். (32)

## வன்செயல்கள் இடம் பெறலாமென்ற அச்சத்தில் 5 மாவட்டங்களில் கலகத்தடுப்புப் பொலிசார்

தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகள் நேற்றுக்காலை வாக்களிப்பு மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையகம் தெரிவித்துள்ளது.

மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள வாக்குப் பெட்டிகளும் வாக்கு சீட்டுகளும் முற்பகல் எட்டு மணியளவில் வாக்களிப்பு மையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டது..

வடக்கு, கிழக்கு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள கொத்தணி வாக்களிப்பு மையங்களில் கடமையாற்றவென 700 அதிகாரிகள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையகம் தெரிவித்தது.

இரண்டரை இலட்சம் அதிகாரிகள் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் பத்து ஆயிரத்துக்கு மேற்பட்ட வாகனங்கள் போக்கு வரத்துப் பணியில் ஈடுப்படுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை முக்கியமாக ஐந்து மாவட்டங்களில் தேர்தல் தொடர்பான வன்செயல்கள் இடம்பெறலாமென தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

குறித்த மாவட்டங்களில் வாக்கு மோசடிகள் ஏற்படலாம் என்ற அச்சத்தில் கலகத்தடுப்பு பொலிசாரைப் பணிகளில் ஈடுபடுத்தவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தொகுதிவாரியாக அமைக்கப்பட்டுள்ள கட்சி தேர்தல் அலுவலகங்கள் அகற்றப்பட வேண்டும். மாவட்டத்திற்கு ஒரு அலுவலகம் மாத்திரம் இயங்கலாம் என்றும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.(32)

## மகிந்த வெற்றி பெற்றால் பாராளுமன்றம் கலைப்பு இல்லை

——மங்கள சமரவீர——

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றால் பாராளுமன்றம் கலைக்கப்பட மாட்டாது என அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார் கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் நேற்று முன்தினம் மங்கள சமரவீர மேலும் கூறியதாவது.

பாராளுமன்றத்தில்ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் 119 பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். விரைவில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்தும் சிலர் எமது அணிக்கு வருவதால் நாம் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை பெற்றுவிடுவோம்

# அணுசக்தியை ஆக்கவழியில் பயன்படுத்த சர்வதேச ஒத்துழைப்பு உருவாக்கப்படும்

## —மன்மோகன்சிங்



(புதுடில்லி)

பாதுகாப்புத் தேவைகளைப்பூர்த்தி செய்வது தொடர்பாக நாட்டின் தேசியக்கொள்கையைவிட்டுக் கொடுக காமல் அணுசக்தியை ஆக்கவழியில் பயன்படுத்துவதில் சர்வதேச ஒத் துழைப்புக்கான சூழல் உருவாக்கப் படும் என இந்தியப்பிரதமர் மன் மோகன்சிங் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இந்திய அணு சக்தி மையத்தின் 16ஆவது மாநாட் டில் உரையாற்றும்போதே மன்மோ கன்சிங் இவ்வாறு தெரிவித்தார்.

வரும் ஆண்டுகளில் அணுசக்தி உற்பத்தியைப் பன்மடங்கு பெருக் கும் திறனை இந்தியா வளர்த்துக் கொள்ளவேண்டுமென்று குறிப்பிட்டார். தமது ஆக்கபூர்வ பணிகளுக்கு அணுச் சக்தியைப் பயன்படுத்தும் ஒத்து ழைப்புத் தொடர்பாக இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்குமிடையே யூலை மாதம் ஒப்பந்தம் கையெழுத்தானமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஈரான் அணுவாயுத கொள்கை விவகாரம்; மத்திய அரசிற்கு இடதுசாரிகள் மிரட்டல்

(புதுடில்லி)

வியன்னாவில் நடைபெறவுள்ள சர்வதேச அணுசக்தி நிறுவன மாநாட்டில் ஈரானுக்கு எதிராக மன்மோகன்சிங் அரசு மீண்டும் வாக்களித்தால் பாரா ளுமன்றில் எங்களின் கடும் எதிர்ப்பை சந்திக்க நேரிடும் என இடது சாரி கட்சிகள் இந்திய மத்திய அரசுக்கு எச்சரித்துள்ளன.

கடந்த செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற சர்வதேச அணுசக்தி நிறுவன கூட்டத்தில் ஐரோப்பிய யூனியன் தீர்மானத்திற்கு ஆதரவாக அதாவது ஈரானுக்கு எதிராக இந்தியா வாக்களித்தது.

அமெரிக்க அரசின் நிர்ப்பந்தம் காரணமாகவே ஈரானுக்கு எதிராக மன் மோகன்சிங் அரசு வாக்களித்தது என இடதுசாரி கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றன. இந்நிலையில் எதிர்வரும் 24ஆம் திகதி சர்வதேச அணுசக்தி நிறுவன கூட்டம் வியன்னாவில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் ஈரானின் அணுவாயுத கொள்கை குறித்து இந்தியாவின் முடிவு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. கூட்டத்தில் கலந்து கொள்ளும் இந்திய பிரதிநிதிகள் ஈரானுக்கு எதிரான நிலையை எடுக்கக்கூடாது என்ற இடது சாரி கட்சிகள் மத்திய அரசிற்கு மிரட்டல் விடுத்துள்ளன.

# குஷ்பு நீதிமன்றில் சரண்

தமிழகப்பெண்கள் சம்பந்தமான பிரச சினைக்குரிய கருத்துத்தெரிவித்ததாக தொட ரப்பட்ட வழக்கில் மேட்டூரில் உள்ள நீதிமன்றத்தில் நடிகை குஷ்பு நேற்று சரணடைந்துள்ளார். பிரச்சினைக் குரிய கருத்துத் தெரிவித்தமைக்காக குஷ்புவிற்கு எதிராக மேட்டூர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டி ருந்தது. இந்தவழக்கில் நீதிமன்றத் தில் ஆஜராகுமாறு அவருக்கு உத்தர விடப்பட்டிருந்தது. ஆஜராகாததைய



டுத்து நீதிபதி அவருக்கெதிராக பிணையில் வெளிவரமுடியாத பிடியாணை பிறப் பித்தார்.

இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் மாலை மேட்டூர் நீதிமன்றம் சென்ற அவரை நேற்று நீதிமன் றத்திற்கு வருமாறு நீதிமன்ற அதிகாரி கள் தெரிவித்தார் கள். இதைத்தொடர்ந்து குஷ்பு நேற்றுக்காலை நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

# இந்திய கடற்படைக்கு விமானங்கள்; குத்தகைக்கு வழங்குகிறது அமெரிக்கா

(புதுடில்லி)

இந்திய கடற்படை ரோந்துப் பணிக்காக இரண்டு கண்காணிப்பு விமானங்களை குத்தகைக்கு வழங்க அமெரிக்க திட்டமிட்டுள்ளது.

இந்தியாவுக்கும், அமெரிக்காவுக் கும், இடையே கடந்த யூன் மாதம் இராணுவ ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட் டது. அதன்படி கூட்டு இராணுவப் பயிற்சி மேற்கொள்வது உள்ளிட்ட பலதரப்பு இராணுவ ஒத்துழைப்பை இரு நாடுகளும் பகிர்ந்து கொள்ளவும், முடிவு செய்யப்பட்டது.

இந் நிலையில் இந்திய கடற் படை ரோந்துப் பணிக்கு அமெரிக்க ரோந்து விமானங்கள் குத்தகைக்கு வழங்கப்படவுள்ளன.

இந்தத் தகவலை அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்ட கன் வெளியிட்டுள்ளது.

பொதுவாக இது போன்ற ஒப்பந்தங்களுக்கு அந்நாட்டு பாராளுமன்ற ஒப்புதலைப் பெற வேண்டும்.

அதன் படி அந்நாட்டு பாராளுமன் றம் முறைப்படி விடுத்துள்ள அறி விப்பில்.

இந்தியக் கடற்படை ரோந்துப் பிரிவில் சோவியத் யூனியன் தயாரிப் பான ஐஎல் -38 ரக கண்காணிப்பு விமானங்கள் உள்ளன.

அவற்றின் ஆயுட்காலம் முடி வடையவுள்ளது. அவற்றிற்கு பதி லாக அமெரிக்க தயாரிப்பானபி-3சி விமானங்களை குத்தகைக்கு விடத் திட்டமிட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் மொத்த மதிப்பீடு 600 கோடி ரூபா வாகும் இந்த ஒப்பந்தம் தடைசெய்யப்பட வேண்டும் என்ற ஆட்சேபம் இருந்தால் அது குறிதது 30 நாட்களுக்குள் தகவல் தெரிவிக்கவும் என்று கூறப் பட்டுள்ளது.

# உணவுக்கு எண்ணெய்த்திட்ட ஊழல்; விசாரணையை சி.பி.ஐ.யிடம் ஒப்படைக்குக

## வெங்கையா நாயுடு

(புதுடில்லி)

உணவுக்கு எண்ணெய் திட்ட ஊழல் விசாரணையை சி.பி.ஐயிடம் ஒப்படைக்க வேண்டும் என்று வெங் கையாநாயுடு கோரிக்கை விடுத் துள்ளார்.

வோல்கர் குழு அறிக்கையின் அடிப்படையில் மத்திய அமைச்சர் நட்வர்சிங் பதவிவிலகக் கோரி பா.ஜ.க. சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டம் எதிரில் கண்டன ஆர்ப் பாட்டம் நடத்தப்பட்டது. இதற்கு பா.ஜ.க. தமிழகத்தலைவர் சி.பி ராதாகி ருஷ்ணன் தலைமை தாங் கினார். ஆர்ப்பாட்டத்தில் பா.ஜ. அகில இந்திய துணைத்தலைவர் வெங்கையா நாயுடு பேசும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

தனிப்பட்ட நபருக்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தவில்லை. ஊழல்குற்றச்சாட்டுக்கு ஆளானவர் ஒரு மத்திய அமைச்சர். அவர் அங்கம் வகிக்கும் காங்கிரஸ் கட்சிக்கு எதி ராக இந்த ஆர்ப்பாட்டம் நடக்கிறது. ரஷ்ய உளவு அமைப்பான கே.ஜி.பி. யிடம் காங்கிரஸ் பணம் வாங்கிய தாகக் குற்றம் கூறப்படுகின்றது. அமெ ரிக்க உளவு நிறுவனத்திடம் காங் கிரஸ் பணம் பெற்றதாக கம்யூ னிஸ் டுத் தலைவர் ஜோதிபாசுவே குற்றம் சாட்டினார்.

இப்போது உணவுக்கு எண்ணெய் திட்டத்தில் ஈராக்கிடம் இருந்து காங் கிரஸ் பணம் வாங்கியதாகக் குற்றச் சாட்டு எழுந்துள்ளது. இப்படி காங்கி ரஸ் பற்றிய குற்றச்சாட்டுக்கள் குவிந்து கொண்டே வருகிறது.

ஈராக்கிடமிருந்து பணம் வாங்கி விட்டார்கள் என்று பா.ஜ.க.கூற வில்லை. வோல்கர் குழு தான் குற்றஞ் சாட்டுகிறது. குற்றச்சாட்டு எழும் போது எதிர்க்கட்சிகள் எப்படி மௌ னமாக இருக்கமுடியும்.

நட்வர்சிங்கை கிரிமினல் விசார ணைக்கு உட்படுத்தவேண்டும். அவர் மீது வழக்குப்பதிவு செய்யவேண்டும். வழக்கு விசாரணையை சி.பி.ஐயிடம் ஒப்படைக்க வேண்டும். இந்தப் பிரச் சினையை பா.ஜ.க. நாடாளுமன்றத் தில் எழுப்பும் என்றார்.


## சாவு அறிவித்தல்

### சிவசம்பு தில்லைநாதன் (சேவயர்)

### (ஓய்வுபெற்ற நில அளவையாளர்)

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 1945 |  | 2005 |
| 01 | | 11 |
| 11 | | 16 |

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது இல.360 B அன்புவெளிபுரம் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு தில்லைநாதன் 16.11.2005 நேற்று கிளி நொச்சியில் காலமானார். அன்னார் சரவணை சிவசம்பு பொன்னம்மாவின் மூத்தமகனும், செல்லையா நாகலிங்கம் நல்லம்மாவின் மருமகனும், தனலட்சுமியின் பாசமிகு கண வரும், அனந்தினி, (இலண்டன்), ஐந்தினி (ஜேர்மன்), டவீந்தினி, கஜேந்தினி ஆகியோரின் தந்தையும், ஜீவாகரன் (இலண்டன்), வேலானந்தன் (ஜேர்மன்) ஆகியோரின் மாமனாரும், வைஸ்ணவியின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியை இன்று வியாழக்கிழமை (17.11.2005) அவரது இல்லத்தில் (08ஆம் வாய்க்கால், உருத்திரபுரம், கிளிநொச்சி) நடைபெற்று பூதவுடல் உருத்திரபுரம் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(6928)


# கடல் வாழ் உயிரினங்களுக்கு சேதுசமுத்திரத் திட்டத்தால் ஆபத்தில்லை

(சென்னை)

சேது சமுத்திரத் திட்டத்திற்கான கால்வாய் தோண்டும் பணிகளால் கடல் வாழ் உயிரினங்களுக்கு எவ் வித பாதிப்பும் இல்லை என்பது ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ள தாக இந்திய தேசிய உயிரின ஆராய்ச்சி மைய ஆணையகத் தலைவர் கண்ணையன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து சேது சமுத்திரத் திட்ட சுற்றுச்சூழல் கண்காணிப்பு குழுவின் தலைவரும் தேசிய உயி ரின ஆராய்ச்சி மைய ஆணையக தலைவருமான கண்ணையன் மேலும் தெரிவிக்கையில்;

சேது சமுத்திரத் திட்டத்துக்காக கால்வாய் வெட்டும் போது கடல் வாழ் உயிரினங்களுக்கு பாதிப்பு ஏற்படு கின்றதா என்பது குறித்து மூன்று மாதங்களாக ஒரு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கால்வாய் அமைப்பதற்காக வெளியேற்றப்பட்ட மணல் இந்த ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இச் சோதனையில் கடல் வாழ் உயிரினங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எவ்வித கனிம மாறுபாடுகளும் காணப்படவில்லை. மாறாக வரவேற்கத்தக்க வகையில் துத்த நாகத்தின் அளவு குறைந் துள்ளது ஆய்வில் தெரிய வந்துள் ளது.

மேலும் சேது சமுத்திரத் திட்டத் திற்கான கால்வாய் தோண்டும் பணி ஆரம்பிக்கப்பட்டதில் இருந்தும் சென்ற டிசம்பரில் ஏற்பட்ட சுனாமி தாக்குதலுக்குப் பின்பும் இப்பகுதியில் மீன்பிடி அதிகரித்துள்ளது. வழக் கத்தை விட அதிகமாக மூன்று முதல் நான்கு மடங்கு மீன்கள் தற்போது பிடிக்கப்படுகின்றன. கடலில் அடி மட்டத்தில் தேங்கியிருந்த கழிவுகள் சுனாமி மற்றும் சேது சமுத்திரக் கால் வாய் பணி காரணமாக வெளியேற் றப்பட்டுள்ளதால் மீன் இனப்பெருக்கம் அதிகரிக்க உதவியுள்ளது.

சேது சமுத்திரப் பணிகளால் 20 கி.மீ தொலைவில் உள்ள பவளப் பாறைகளுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்பதும் ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.


## குமரகுரு அழகுப்பொருள் வாணிபம்

### பணியாளை வேண்டுகை

*கணக்காளர்

*காசாளர்

கணிதம் சித்தி அடைந்திருப்பதுடன் கணனி அறிவும் விரும்பத்தக்கது இருபாலாரும் விண்ணப் பிக்கலாம். (மகளிர் விரும்பத்தக்கது) 30.11.2005 குமரகுரு வாணிபத்திற்கு நேரில் வருகைதரவும்.

குமரகுரு புடவை/
அழகுப்பொருள் வாணிபம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.

(சி.13223)

## 2020 ஆம் ஆண்டு ஒலிம்பிக்; இருகொரியாக்களும் இணைந்து நடாத்தும்

2020 ஆம் ஆண்டு கோடைக்கால ஒலிம்பிக் போட்டிகளை தென்கொரியா நாடு தனது அண்டை நாடான வடகொரியாவுடன் இணைந்து நடத்த விருப்பம் தெரிவித்திருக்கிறது.

இந்தத்தகவலை நேற்று முன்தினம் பூசான் நகர மேயர் போங்யாங் தெரிவித்தார். தென்கொரியாவில் உள்ள பூசான் நகரிலும், வடகொரியாவின் தலைநகரிலும் இப்போட்டிகள் நடத்தப்படும்.

ஏற்கனவே இரு நாடுகளும் எதிரும் புதிருமாக இருப்பவை இந்த ஒலிம்பிக் நடத்துவதால் உறவு பலப்படும் என்கிற நம்பிக்கையில்முன் வந்திருக்கிறார்கள்.




# முல்டான் டெஸ்ட் போட்டி
# பாக். அசத்தல் வெற்றி



முல்டானில் நடைபெற்று வந்த இங்கிலாந்து-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அசத்தலான வெற்றி பெற்றுள்ளது.

விறுவிறுப்பான இறுதி நாள் போட்டியில் 198 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பாடிய இங்கிலாந்தின் வெற்றிக்கனவை தகர்த்தனர் பாகிஸ்தான் பந்து வீச்சாளர்கள்.

சுலபமான இலக்கை இங்கிலாந்து அணி எட்டி விடும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் 175 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 22 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

துடுப்பாட்டத்தில் இமன் பெல்31, ஜோன்ஸ் 33 ஓட்டங்களையும், ஸ்ரோஸ் 23 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கனேரியா நான்கு விக்கெட்டுக்களையும், அக்தர் மூன்று விக்கெட்டுக்களையும்,சமி இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். மேற்படி வெற்றி மூலம் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1-0 என்ற நிலையில் பாகிஸ்தான் முன்னணியில் திகழ்கிறது.

போட்டியின் சிறப்பாட்டக்காராகமுதல் இனிங்சில் 71 ஓட்டங்களையும், இரணடாவது இனிங்சில் சதம் அடித்த சல்பாட் தெரிவானார்.



பாகிஸ்தான் முதல் இனிங்ஸ்-274 ஓட்டங்கள், இரண்டாவது இனிங்ஸ் 341 ஓட்டம்,
இங்கிலாந்து முதல் இனிங்ஸ் 418 ஓட்டங்கள். இரண்டாவது இனிங்ஸ் 175 ஓட்டங்கள்.

## சிம்பாப்வே கிரிக்கெட் அணி வீரர்கள் போட்டிகளில் பங்கேற்க ஒப்பந்தம்




சிம்பாப்வே கிரிக்கெட்சபையுடன் அணி வீரர்கள் முரண்பட்டுள்ள போதிலும் புதிதாக போட்டிகளில் பங்கேற்க ஒப்பந்தம்செய்துள்ளதாக அறியவருகின்றது.

கடந்த செவ்வாயன்று கிளைவ் பீல்டை அவர்கள் சந்தித்து ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளனர் ஒப்பந்தம் செய்து கொண்டவீரர்களில் 14 பேர் அனுபவவீரர்களென்றும் மேலும் 21 பேர் உள்ளூர் அணி வீரர்களென்றும் இருவர் சர்வதேசப்போட்டியாளர்கள் சென்றும் தெரிவிக் கப்படுகிறது

இதற்கிடையில கிரிக்கெட் சபைதலைவர் பீற்றர் சிங்கொக்கும் முகாமையாளர் ஓசிகும் பதவி விலகியுள்ளனர். அத்துடன் அச்சுறுத்தல்காரணமாக தலைமறைவாகியிருந்த தைபு வீடு திரும்பியுள்ளார்.

## குண்டு வெடிப்புகள் சகஜமே
## இங்கிலாந்து அணி பயப்படத்தேவையில்லை



கராச்சியில் செவ்வாய்க்கிழமை ஒரு உணவு விடுதி எதிரே நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் இரண்டு பேர் பலியாகினர். , 15 பேர் காயமடைந்தனர்.

இந்நிலையில் ஏற்கனவே திட்டமிட்டபடி, அடுத்த மாதம்அங்குசென்று ஒரு நாள் போட்டியில் விளையாட இங்கிலாந்து அணி அச்சப்படும் என்று கூறப்படுகிறது.

"இதெல்லாம் இங்கே சகஜம். பயப்பட வேண்டாம். திட்டமிட்டபடி இங்கிலாந்து அணி விளையாட வரலாம்" என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷஹாரியார் கான் கராச்சியில் செவ்வாய்க்கிழமை நிருபர்களிடம் கூறினார்.

இந்நாட்களில் குண்டுவெடிப்பு என்பது தினசரி வாழ்வின் ஒரு அங்கமாகிவிட்டது.லண்டன் குண்டுவெடிப்புக்குப் பின் அவுஸ்திரேலியா அணி அங்கு சென்று ஆடவில்லையா? டில்லி குண்டுவெடிப்புக்குப் பின்பும் இலங்கை அணி இங்கே சென்று ஆடவில்லையா? கராச்சியில் குண்டு வெடித்தால் மட்டும் பயப்பட வேண்டுமா என்ன? இங்கேயும் வந்து இங்கிலாந்து அணி ஆடலாம் என்றார்?

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சைக்கான விண்ணப்பம் கோரல்

சிறிலங்கா உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்படும் உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. நவம்பர்30 ஆம் திகதிக்கு முன் இவ் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதால் கிளிநொச்சி, பூநகரி, முல்லைத்தீவு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் விண்ணப்பங்களை கிளிநொச்சியில் அமைந்துள்ள இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தில் அல்லது புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர் திரு. காசிநாதனிடமிருந்தோ பெற்று 28 ஆம் திகதிக்கு முன் மீண்டும் சமர்ப்பிக்கவும்.

இவர்களுக்கான பரீட்சைகள் கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடைபெறும்.

## கங்குலி மீண்டும் அணிக்குத் திரும்புவது கடினமான ஒன்று-பிரசாத்



இந்தியக்கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி மீண்டும் அணிக்குத் திரும்புவது கடினம் என்று முன்னாள் வீரர் பி.கே. வெங்கடேஷ் பிரசாத் கருத்துத் தெரிவித்துள்ளார். முன்னாள் பந்து வீச்சாளரும் தேசிய 19 வயதுக்குட்பட்ட அணியின் பயிற்சியாளருமான வெங்கடேஷ் பிரசாத், விசாகப்பட்டினத்தில் செவ்வாய்க்கிழமை நிருபர்களிடம் பேசியதாவது.

தற்போது இந்திய அணியில் உள்ள துடிப்புள்ள இளைஞர்களின் செயற்பா டுகளை வைத்துப் பார்க்கும் போது கங்குலி இப்போது தேவைதானா என்ற எண்ணம் தோன்றும்.

அதனால் இந்திய அணிக்கு கங்குலி பங்கு முடிவுக்கு வந்துவிட்டதாகக் கூற முடியாது. இன்னும் ஓரிரு ஆண்டுகளுக்குக் கங்குலி சிறப்பாக செயற்பட வாய்ப்பு உள்ளது. தலீப் கிண்ணப் போட்டியில் அவர் சரியாக ஆட முடியா மல் போயிருக்கலாம். என்றாலும் அனுபவம் மிகுந்த வீரர் அவர்.ஒரு நாள் போட்டிகளில் ஏராளமான ஓட்டங்களைக் குவித்தவர். இப்போதைய இந்திய அணியில் வீரர்கள் சிறப்பாக ஆடுகின்றனர். சரியாக விளையாடாதவர்களை அணியில் இருந்து விலக்கி வைக்கும் போக்கு வரவேற்கத்தக்கது என்றார்.

## வெளிநாட்டுக்கு குடும்பத்துடன் செல்ல அவுஸ்திரேலிய அணிக்கு கட்டுப்பாடு

அவுஸ்திரேலியா கிரிக்கெட் வீரர்கள் வெளிநாடுகளுக்கு விளையாடச் செல்லும் பொழுது தங்களுடைய மனைவிமாரையும், பிள்ளைகளையும் கூட்டிச் செல்வதால் அவர்களுடைய கவனம் விளையாட்டில் குறைகிறது என்றும் இதனால் சில நேரங்களில் தோல்வியைச் சந்திக்க நேரிடுகிறது என்றும் புதிய குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

சமீபத்தில் அவுஸ்திரேலிய அணி இங்கிலாந்துக்குச் சென்று அந்நாட்டு அணியுடன் ஆஷஸ் தொடர் போட்டியில் விளையாடியது. அந்தத் தொடரில் அவுஸ்திரேலியா தோற்றது. இங்கிலாந்து 15 ஆண்டுகளுக்குப் பின் ஆஷஸ் தொடரை வென்று சாதனை நிகழ்த்தியது. அவுஸ்திரேலியா இப்போட்டியில் தோற்றது ஏன் என்பது பற்றி அவர்களுடைய நாட்டில் பெரிய சர்ச்சைகள், விமர்சனங்கள் நடைபெற்றது.



அப்போதுதான் வீரர்கள் விளையாடப்போகும் பொழுது மனைவியையும் கையோடு அழைத்துச் செல்கிறார்கள். தோல்விக்கு இதுவும் ஒரு காரணம் என்று புதிய கண்டுபிடிப்பைச் சில விமர்சகர்கள் கண்டுபிடித்து கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தக்குற்றச்சாட்டு பற்றி விசாரிக்க அவுஸ்திரேலியா கிரிக்கெட் சபை ஒரு உதவிக் குழுவை நியமனம்செய்தது. அந்த விசாரணைக்குப் பின் கிரிக்கெட் வீரர்களுடன் அவுஸ்திரேலியா கிரிக்கெட் சபை ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. வெளிநாடு செல்லும் பொழுது ஒரு வீரர் தனது மனைவி, பிள்ளைகளை ஒரு ஆண்டில் ஒரு தடவை தன்னுடன் அழைத்துச் செல்லலாம். இரண்டு வாரங்கள் மட்டும் குடும்பத்தினரை ஒரு வீரர் தன்னுடன் வைத்துக்கொள்ளலாம். பின் அனுப்பி விட வேண்டும் என்கிற மாதிரி அந்த ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது.

சில அவுஸ்திரேலிய வீரர்கள் இந்த ஒப்பந்தத்திற்குச் சம்மதம் தெரிவித்த போதிலும் தங்களுடைய அதிருப்தியையும் வெளியிட்டுள்ளனர். ஆஷஸ் தொடர் போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்றதற்காக எங்களுக்கு இது போன்ற கட்டுப்பாடுகளை விதிப்பவர்கள் அந்தத் தொடரில் இங்கிலாந்து சிறப்பாக விளையாடியது என்பதை ஏற்க விரும்பாதது ஏன் என்று அந்த அவுஸ்திரேலிய வீரர்கள் வினா எழுப்பியுள்ளனர்.

## ஹைதராபாத் ஒருநாள் போட்டி தென்னாபிரிக்காவுக்கு 5 விக்கெட் வெற்றி

தென்னாபிரிக்கா- இந்திய அணிகளுக்கிடையில் ஹைதராபாத்தில் நேற்று ஆரம்பமான முதலாவது ஒரு நாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி ஐந்து விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி இந்திய அணியை துடுப்பெடுத்தாட பணித்தது.

இந்திய அணி ஆரம்பத்தில் 39 ஓட்டங்களுக்கு ஐந்து முக்கிய விக்கெட்டுக்களை இழந்த போதும் யுவராஜ்சிங் பதான், ஹர்பஜன்சிங் ஆகியோரின் சிறப்புத் துடுப்பாட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஒன்பது விக்கெட்டை இழந்து 249 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் யுவராஜ்சிங் 103 ஓட்டங்களையும், பதான் 46, ஓட்டங்களையும், ஹர்பஜன்சிங் 37 ஓட்டங்களையும் அதிக பட்சமாக பெற்றனர்.

பந்து வீச்சில் பொலக் நிற்றினி, நெல் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், கைப்பற்றினார்.

வெற்றி இலக்கு நோக்கி ஆடிய தென்னாபிரிக்கா 48.5 ஓவரில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.



துடுப்பாட்டத்தில் கலிஸ் ஆட்டமிழக்காது 68 ஓட்டங்களையும், கெம்ப் 46 ஓட்டங்களையும் பெற்றனர்.

இவர்களை விட பிறின்ஸ் 46, சிமித் 48 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

போட்டியின் சிறப்பாட்டக்காராக சதமடித்த யுவராஜ்சிங் தெரிவானார்.



சிந்தனைக்கு

இயற்கை எனது நண்பன்;
வாழ்க்கை எனது தத்துவாசிரியன்;
வரலாறு எனது வழிகாட்டி.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 17.11.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## புதிய சனாதிபதியின் முன்...!

சிறிலங்காவில் ஐந்தாவது சனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்பு இன்று நடைபெறவுள்ளது. பதின்மூன்று வேட்பாளர் தேர்தல் களத்தில் இருப்பினும் இரு முனைப்போட்டி என்பது தெளிவானது. அதாவது அடுத்த சனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவா, மகிந்தராஜபக்ஷவா? என்பதே முடிவு செய்யப்பட வேண்டிய தொன்றாகும்.

இவ் இருவரில் யார் வெற்றி பெறுவார்கள் என்பது குறித்து தற்பொழுது ஆருடம் கூறுவது சாத்தியப்பாடானதொன்றாகத் தெரியவில்லை. தென்னிலங்கையில் இருந்து வரும் தேர்தல்கள் நிலவரம் எதுவும் தெளிவாக இல்லை.

தேர்தல் குறித்துக்கருத்துக் கணிப்புக்கள் சில வெளி வந்து கொண்டிருக்கின்றபோதும் அக்கருத்துக் கணிப்புக்கள் நடுநிலைமையுடன் கூடியவையாகத் தெரியவில்லை. கருத்துக்கணிப்புக்கள் ஒவ்வொன்றும் ஒன்றிற்கு ஒன்று நேர் எதிர்மறையானவையாகவே உள்ளன.

பொதுவாகவே கருத்துக்கணிப்புக்கள் சரியான முடிவுகளைத் தெளிவாக்குகின்றனவா? என்பது குறித்து ஏற்கனவே விமர்சனங்கள் உண்டு. பாரிய இடைவெளிகளுள்ள வெற்றி வாய்ப்புக் குறித்து நடுநிலைமையான கருத்துக்கணிப்புக்கள் ஓரளவிற்குச் சரியான எதிர்வுகூறல்களை வெளிப்படுத்துபவையாக இருப்பினும், கடும் போட்டி நிலவும் தேர்தல்களில் கருத்துக்கணிப்புக்கள் பொய்யாகி விடுவதும் உண்டு.

ஆனால், சிறிலங்காவைப் பொறுத்து கருத்துக் கணிப்புக்கள் என்பன எந்த விதத்திலும் களநிலவரத்தைப்பிரதிபலிப்பனவாகத் தெரியவில்லை. ஏனெனில் கருத்துக்கணிப்புக்கள் மூலம் மக்களைத்திசை திருப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவே தெரிகின்றது. அதாவது கருத்துக்கணிப்புக்கள் ஒருதலைப்பட்சமாக, வேட்பாளர் ஒருவர் முன்னணியில் இருப்பதாக காட்டிக் கொள்ளும் விதத்தில் பிரச்சாரங்கள் மேற்கொள்ளத்தக்க வகையில் கருத்துக்கணிப்பு முடிவுகள் எனப் பொய்கள் கூறப்படுகின்றன.

ஆகையினால், கருத்துக்கணிப்புக்கள் மூலம் உறுதியான முடிவுகள் எதனையும் பெறமுடியாத நிலையில் எமக்குக் கிடைக்கும் தகவல் அடிப்படையில் தேர்தலில் கடும் போட்டி நிலவும் என்றே ஊகிக்க முடிகின்றது. அதாவது வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும் வரை பொறுத்திருக்க வேண்டும் என்பதாகவே உள்ளது.

தேர்தலில் போட்டியிடும் முக்கிய வேட்பாளர்களில் ஒருவரான மகிந்த ராஜபக்ஷ பௌத்த சிங்கள அடிப்படை வாதத்தை தனது முக்கியமான தளமாகக் கொண்டுள்ளார். அதாவது பௌத்த சிங்கள அடிப்படைவாதிகளின் வாக்குப் பலத்திலேயே அவரது தேர்தல் வெற்றியுள்ளது.

மற்றையவரான ரணில் விக்கிரமசிங்க பௌத்தசிங்கள மக்களின் வாக்கு வங்கியையே குறியாகக் கொண்டிருப்பினும், சிறுபான்மை இனத்தவர்களின் சில தரப்பினரையும் தன்னுடன் இணைத்துக்கொண்டுள்ளார். இதன் பிரகாரம் முஸ்லீம் காங்கிரஸ், மலையகத் தமிழரின் வாக்குகள் அவரின் வெற்றியை உறுதிசெய்ய முக்கியமானவையாகக் கொள்ளப்படுகின்றது.

ஆனால், இத் தேர்தல் முடிவுகள் எவ்வாறானவையாக இருப்பினும், இம்முறை சிறிலங்காவின் சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவரின் முன்னால் பாரிய பொறுப்புக்கள் உள்ளன. அதாவது இலங்கையின் எதிர்காலத்தையே தீர்மானிக்கும் வகையிலான தீர்மானங்களை எடுக்க வேண்டிய காலகட்டத்தில் இச் சனாதிபதி பதவி கிடைக்கப்பெறுகின்றது.

குறிப்பாக, இலங்கைத்தீவு ஒரு அரசாக இருப்பதாக, அன்றி இரண்டு நாடுகளாக மாறுவதா என்பது குறித்த தீர்மானம் இம்முறை சனாதிபதியால் பொறுப்பேற்கவுள்ளவரின் கைகளிலேயே உள்ளதெனலாம். கடந்த காலத்தைப் போன்று இலங்கையின் அடுத்த சனாதிபதி நாட்டை நிர்வகித்துவிட முடியாது.

ஆகையினால், புதிய சனாதிபதியாகப் பொறுப்பேற்பவர் இலங்கையின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பவராக இருப்பார் எனக் கூறின் மிகையாகாது. சிலர் கருதலாம் சமாதானமா? யுத்தமா? என்பதை புதிய சனாதிபதி தீர்மானிப்பவராக இருக்கலாம் என்று. ஆனால் உண்மையில் நிலைமை அவ்வாறானதாக இல்லை.

ஏனெனில் தமிழ் மக்கள் தொடர்ந்தும் தற்போதைய சூழ்நிலை தொடர்வதை, நீடித்துச் செல்வதை விரும்பவில்லை. இனப்பிரச்சினைக்கான இறுதித்தீர்வொன்றை நோக்கி முன்னேறவே விரும்புகின்றனர். ஆகையினால் புதிய சனாதிபதி அதற்கு ஏற்றதான தீர்மானத்தை மேற்கொள்ளுதல் வேண்டும். மேற்கொள்ளப்படாதபட்சத்தில், அடுத்த சனாதிபதியின் பதவிக்காலத்தில் இலங்கையின் அரசியல் வரலாற்றில் பெரும் திருப்பங்களை எதிர்பார்க்கலாம்.

# தமிழ் மக்கள் சனாதிபதித்தேர்தலில் எவருக்கும் வாக்களிக்கத் தேவையில்லை

### – தமிழ் தேசிய கூட்டமைப்பு பா.உறுப்பினர் க.பத்மநாதன்

இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து தமிழ் மக்களுக்குச் சிங்கள அரசாங்கத்தினாலோ, அல்லது சிங்கள ஏகாதிபத்திய வாதிகளாலோ எந்தவிதமான விமோசனங்களும் கிடைக்கவில்லை. எனவே நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலில் அம்பாறை மாவட்டத் தமிழ் மக்கள் எந்தவொரு வேட்பாளருக்கும் வாக்களிக்கத் தேவையில்லை இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.பத்மநாதன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையே அண்மையில் நடைபெற்ற சந்திப்பை அடுத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் எடுத்த தீர்மானத்தின் பிரகாரம் வட - கிழக்குத் தமிழ் மக்கள் எந்தவொரு வேட்பாளருக்கும் வாக்களிக்கத் தேவையில்லை.

சனாதிபதியான எவரும் தமிழ் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியைச் செயற்படுத்தியதாகச் சரித்திரம் இல்லை. அதேபோன்று இப்பொழுதும் இந்த சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளரும் ஆசை வார்த்தைகளைத் தமிழ் மக்களுக்கு அள்ளி வீசுகின்றார்கள்.

இவர்கள் வெற்றியடையும் வரையுமே இவர்களது பேச்சு இருக்கும். ஆனால் இவர்கள் ஆட்சியமைத்ததும் எதுவும் செய்யமாட்டார்கள். என்பதே உண்மை. எனவே அம்பாறை மாவட்டத் தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் கடந்த காலத்தில் இரண்டு அரசாங்கங்களும் செய்த அநியாயங்கள், ஆக்கிரமிப்புகளில் உயிரிழந்து, உடமையிழந்து, இடம் பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

எனவே அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் சுதந்திரமாகவும், நீதியாகவும், ஒரு தனித்தமிழ் ஈழத்தில் வாழ வேண்டும் என நினைக்கின்றார்கள். ஆகவே அம்பாறை மாவட்டத் தமிழ் மக்கள் எவருக்கும் வாக்களிக்காது சனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களுக்கு எவ்வித அக்கறையும் இல்லை என்பதை வெளிப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

# சனாதிபதித்தேர்தல் வன்முறைகள் குறித்து இதுவரை 172 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதித்தேர்தலுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்த நாளிலிருந்து இதுவரை தேர்தல் வன்முறைகள் தொடர்பாக 172 முறைப்பாடுகள் பதிவாகியிருப்பதாக பவ்ரல் அமைப்பு அறிவித்துள்ளது.

நேற்று புதன்கிழமை காலை கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பவ்ரல் அமைப்பின் இயக்குநர் கிங்ஸ்லி ரொட்றிகோ கூறியதாவது;

தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பாக 109 முறைப்பாடுகளும், தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் 22 முறைப்பாடுகளும் அச்சுறுத்தல்கள் குறித்து 22 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

அரசியல் காரணங்களுக்காக ஏழு இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. துப்பாக்கிச் சூட்டினால் காயப்படுத்திய சம்பவங்கள் பற்றி ஐந்து முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. ஒரு கொலைச்சம்பவமும் பதிவாகியிருக்கிறது. தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக 30 நாடுகளிலிருந்து கண்காணிப்பாளர்கள் கொண்டு வரப்பட்டுள்ளனர். ஏனைய தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் இம்முறை தேர்தலில் வன்முறைச் சம்பவங்கள் மிகவும் குறைந்த அளவிலேயே பதிவாகியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

# விலகிய வேட்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கையெடுக்க வலியுறுத்து

(கொழும்பு)

பிரதமமந்திரி மகிந்த ராஜபக்ஷ விற்கு ஆதரளிக்கும் முகமாக சனாதிபதித் தேர்தல் போட்டியில் இருந்து விலகியுள்ள நான்கு வேட்பாளர்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஐக்கிய சமத் துவ கட்சியின் சனாதிபதி வேட்பாளர் சிறிதுங்க ஜெயசூரிய கேட்டுள்ளார்.

முற்போக்கு முன்னணியின் நெல் சன் பெரேரா, ஸ்ரீலங்கா தேசிய முன்னணியின் விமல் கீ கனகே, ஐக்கிய தேசிய மாற்று முன்னணியின் சாந்த தர்மவஜ மற்றும் ஐக்கிய சனநாயக முன்னணியின் அஜித்குமார ஆகியோரே போட்டியில் இருந்து விலகிக்கொண்ட வேட்பாளர்களாவர்.

இந்தநிலையில் இவர்கள் நால்வரும் இதுவரை காலமும் அரச நிர்வாகத்திற்கு பாரிய செலவீனங்களை ஏற்படுத்தியுள்ளனர்.

அரசாங்கச் செலவில் தமது பிரச்சாரங்களை மேற்கொண்டதன் காரணமாக அரசாங்க சொத்தை நாசப்படுத்தியுள்ளதாக சிறிதுங்க ஜெயசூரிய குற்றம் சுமத்தியுள்ளார்.

# முன்னாள் இராணுவ மேஜர் தற்கொலை!

(கொழும்பு)

பல்வேறு கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் இராணுவ மேஜர் போகம்பர சிறைச்சாலையில் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துள்ளார். அநுருத்த சம்பிக்க விஜேபாகு என்ற இந்த முன்னாள் இராணுவ மேஜர் வாகனக் கொள்ளை, அதன் சாரதி கொலை செய்யப்பட்டமை என்பன தொடர்பாக வத்தேகம பொலிசாரால் 2004 ஒக்ரோபர் மாதம் கைது செய்யப்பட்டிருந்தார். இந்தக் கொள்ளை அக்குறணையில் இடம்பெற்றது. இவர் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் மீட்கப்பட்டு கண்டி வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டு பின்னர் மரணமானார்.

# சனாதிபதியானால் சு.க.வுடன் இணைந்தே சமாதான நடவடிக்கைகள் முன்னெடுப்பு

### – ரணில் மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் பிரதான கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதுடன் நாட்டில் விலைவாசி பிரச்சினையையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கவுள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆங்கில நாளேடு ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் வடக்கு கிழக்கு மக்கள் தமக்கு வாக்களிப்பார்கள் என தான் நம்புவதாக தெரிவித்துள்ள ரணில் விக்கிரமசிங்க, விடுதலைப்புலிகள் ஒரு அமைப்பு என்ற வகையில் எவ்வாறு நடந்து கொள்வது என்பது பற்றி அவர்களே முடிவு செய்யவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எந்த வேட்பாளருக்கு ஆதரவு வழங்கப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்ட அவர், மக்கள் தாம் விரும்பியவர்களுக்கு வாக்களிக்குமாறும் கூறியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எது எப்படி இருப்பினும் வடக்கு மற்றும் தென்பகுதி மக்களுக்கு தமது வாக்குகளை சுதந்திரமாக வழங்கும் சந்தர்ப்பம் இருக்க வேண்டும் என்பதே முக்கியமானது எனவும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (32)

# வாக்குச்சீட்டுக்கள், மதுபானத்துடன் நுவரெலியாவில் ஏழு பேர் கைது!

(கொழும்பு)

நுவரெலியாவில் வாக்குச் சீட்டுக்களுடன் ஏழு பேர் நேற்றுச் சிறிலங்காப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நுவரெலியாவின் பிரபல விடுதி ஒன்றில் வைத்தே இவர்களைக் கைது செய்துள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர். சனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள்; வாக்குச் சீட்டுக்கள், மதுபான வகைகள் என்பவற்றுடன் காணப்பட்ட இவர்கள் கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பொருட்களையும் வாகனத்தையும் கைப்பற்றிய பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (32)

# தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்த பொலிசாருக்கு சுடும் உத்தரவு!

(கொழும்பு)

தேர்தல் வன்முறையில் ஈடுபடுவோர் மீது தகுதி தராதரம் பாராது துப்பாக்கிச் சூட்டை நடத்துமாறு பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ பொலிஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். இதற்கான அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

சனாதிபதித் தேர்தல் பாதுகாப்புக் கடமைகளில் பொலிசாருக்கு மேலதிகமாக ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இன்று சனாதிபதித் தேர்தல் தினத்தன்று இரண்டாயிரத்து 227 நடமாடும் பொலிஸ் வாகனங்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரியன்சி பெரேரா தெரிவித்தார்.

இவற்றில் 55 வாகனங்கள் யாழ். மாவட்டத்தில் பணியில் ஈடுபடுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். நாடளாவிய ரீதியில் உள்ள 22 வாக்கு எண்ணும் மையங்களுக்கு தலா ஒரு உதவி பொலிஸ் அத்தியட்சகர் நியமிக்கப்படவுள்ளதாகவும் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரியன்சி பெரேரா தெரிவித்தார்.

வாக்கு மோசடி மற்றும் வாக்களிப்பு மையங்களுக்கு அருகில் வன்முறைகளில் ஈடுபடும் நபர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் கூறினார். (32)

# யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் சமூக விரோதி அடித்துக் கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக்கல்லூரி மைதானத்துள் வைத்து சமூக விரோதி நையப்புடைக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

நேற்று முற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பல்வேறுபட்ட குற்றச் செயல்கள் மற்றும் சமூக விரோதச் செயல்கள் என்பனவற்றுடன் தொடர்புடைய தி.தினேஷ் (வயது-20) என்ற இளைஞன் கலாசாரம் பேணும் குழுவினரால் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டார்.

இச் சமூக விரோதியை அக் குழுவினர் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் உள்ள கம்பம் ஒன்றில் கட்டிவிட்டுச் சென்றதுடன் அவரால் புரியப்பட்ட சமூக விரோதச் செயல்களையும் பட்டியலிட்டு அருகில் தொங்க விட்டிருந்தனர்.

இதனையடுத்து நேற்றுக் காலை அப் பகுதியில் திரண்ட மக்கள் அச் சமூக விரோதியைக் கடுமையாக நையப்புடைத்ததினால் அவர் உயிரிழந்தார்.

இது இவ்வாறிருக்க இவர் தொடர்பான பல வழக்குகள் யாழ். நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன என்று பொலிசார் கூறியுள்ளனர்.

உயிரிழந்தவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (33,41,27)

## இன்று சிரமதானம்

மாவீரர் தினத்தை முன்னிட்டு கடந்த 12 ஆம் திகதி நடைபெற்ற கிளிநொச்சி வர்த்தக சங்கப் பொதுக் கூட்டத் தீர்மானத்திற்கமைவாக இன்று கிளிநொச்சி வர்த்தகர்களினால் கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லத்தில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

சிரமதானப் பணிகள் நடைபெறும் நேரம் வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருக்குமெனவும் சிரமதானப் பணிக்கு வருகை தரும் அனைத்து வர்த்தகர்களும் இன்று காலை 8.00 மணிக்கு சிரமதானப் பணிக்குரிய உபகரணங்களுடன் மாவீரர் துயிலுமில்லத்திற்கு சமுகமளிக்கும் வண்ணம் கிளிநொச்சி வர்த்தகசங்க இணைப்பாளர் முதல்வராசா வேண்டுகை விடுத்துள்ளார். (சோ)

### சிறிலங்கா....

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட புலித்தேவன் மேலும் தெரிவித்ததாவது: எமது நிலைப் பாட்டில் நாம் உறுதியாகவுள்ளோம். எமது நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

### ராணுவ....

மணிக்கும், 6.00 மணிக்குமிடையில் இரு தடவை கைக்குண்டு வீச்சுகளும், ஒரு தடவை துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாலை 7.15 மணியளவில் மல்லாகம் ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது கைக்குண்டு வீச்சு நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, அச்சுவேலியிலுள்ள ஈ.பி.டி.பி அலுவலகம் மீது இரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற கைக்குண்டு வீச்சில் ஒருவர் காயமடைந்தார். அத்துடன் சுண்டிக்குளம் பாண்டியன்தாழ்வு இராணுவக் காவல் நிலை மீது நேற்று மாலை 4.00 மணியளவில் கைக்குண்டு வீச்சு இடம்பெற்றுள்ளதுடன் இரவு 8.00 மணியளவில் திக்கம் நாவலடிச் சந்தியிலுள்ள படை முகாம் மீது கைக்குண்டு வீச்சு இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, நேற்று மாலை சாவகச்சேரி ஈ.பி.டி.பி. அலுவலகத்திலிருந்து இராணுவப் பாதுகாப்புடன் புறப்பட்ட வாகனத் தொடரணி மீது கைக்குண்டு வீச்சு இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, நேற்றிரவு 10 மணியளவில் நெல்லியடி பொலிஸ் நிலையம் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் பொலிசார் ஒருவர் காயமடைந்துள்ளார்.

அத்துடன் இரவு 7.00 மணியளவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி வாக்களிப்பு நிலையத்துக்கு காவலுக்கு நின்ற பொலிசார் மீது இடம்பெற்ற கைக்குண்டு வீச்சில் பொலிசார் ஒருவர் காயமடைந்தார்.

அத்துடன் இரவு பத்து மணியளவில் யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயமருகே தேர்தல் வாக்குச் சாவடிக்கு காவலுக்கு நின்ற படையினர் மீது இரு கைக் குண்டுகள் வீசப்பட்டுள்ளன. அத்துடன் கரவெட்டி, மந்திகை ஆகிய இடங்களிலுள்ள ஈ.பி.டி.பி. அலுவலகங்கள் மீது கைக்குண்டு வீச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன. இதில் இரவு 11.00 மணியளவில் மந்திகையில் இடம்பெற்ற கைக் குண்டு வீச்சில் ஒரு சிப்பாய் காயமடைந்தார். இரவு 11.30 மணியளவில் நல்லூர் வைமன் வீதி சந்திப் பகுதியிலுள்ள இராணுவ காவலரண் மீது கைக்குண்டு வீச்சு இடம் பெற்றுள்ளது. இதேவேளை இரவு 11.45 மணியளவில் யாழ். மடத்தடி தண்ணீர் தாங்கியடியில் இராணுவத்தினர் மீது இடம் பெற்ற கைக் குண்டு வீச்சில் சிப்பாய் ஒருவர் காய மடைந்தார்.

### ஊர்காவல்....

யன் சலாகே பிரேமதிலக்க என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அப் பகுதியிலுள்ள விகாரையில் இரவு நேரக் கடமையில் ஈடுபட்டிருந்த குறிப்பிட்ட இருவரும் கடமை முடிந்து வீடுதிரும்பிக் கொண்டிருக்கையில் அந்த வழியாக உந்துருளியில் வந்த நபர்கள் இத்துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

### தமிழீழ....

மற்றும் பொது இடங்கள், மாவீரர் துயிலுமில்லங்களில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பெற்று வருகின்றன. அத்துடன் மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களைக் கௌரவிக்கும் நிகழ்வுகளும் இடம்பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்று வருகின்றன. மற்றும் மாவீரர் துயிலுமில்லங்களுக்கு செல்லும் வீதிகள் யாவும் செப்பனிடும் பணிகளும் துரிதமாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# சிறிலங்காப் படையினரால் கைதான இளைஞர் வாழைச்சேனையில் சடலமாக மீட்பு

## -அடையாளம் காணப்படாத மற்றுமொரு சடலம் கண்டெடுப்பு-

(மட்டக்களப்பு)

சிறிலங்கா படையினரால் கடந்த திங்கட்கிழமை செங்கலடி கறுத்தப் பாலத்தில் கைது செய்யப்பட்ட செல்லையா சுரேஸ் (வயது-23) என்ற இளைஞரது சடலம் வாழைச் சேனைப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. கண்டெடுக்கப்பட்ட சடலத்திற்கு அருகில் இன்னுமொரு சடலம் காணப்படுவதாகவும் அது அடையாளம் காணப்படவில்லை எனவும் தெரியவருகின்றது. களுவங்கேணி முதலாம் குறிச்சியைச் சேர்ந்தவரான சுரேஸ் கரடியனாற்றில் உள்ள தமது வயலுக்குச் சென்று திரும்பும் போதே சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

பதில் நீதிபதி வினோபா இந்திரன் முன்னிலையில் சுரேசின் தாயார் செல்லையா திரேசா (வயது-50) சடலத்தை அடையாளம் காட்டினார்.

நீதிபதியிடம் சாட்சியமளித்த செல்லையா திரேசா, தனது மகன் பன்குடா வெளியிலுள்ள உறவினர் வீட்டிற்கு அவரது நண்பருடன் நேற்று முன்தினம் சென்றதாகவும் கறுத்தப் பாலம் சோதனைச் சாவடிக்கு அருகாமையில் தனது மகனும் மற்றுமொருவரும் வெள்ளைவாகனமொன்றில் கடத்தப்பட்ட தகவலைத்தான் அறிந்ததாகவும் கூறினார். சுட்டுக்கொல்லப்பட்ட சுரேசுடன் சென்றதாகக்கூறப்படும் கே.காந்தன் (வயது-21) என்பவர் பற்றித் தகவல் இல்லை. இந்த மரணம் கொலை என்று பதில் நீதிபதி தீர்ப்பளித்துள்ளார்.

# திருமலை பாலையூற்றில் இருவர் சுட்டுக்கொலை!

திருகோணமலை பாலையூற்றில் நேற்று இரு வேறு சம்பவங்களில் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

பாலையூற்றுப் பகுதியில் நேற்று அடையாளம் தெரியாத நபர்களினால் அல்பிரட் பிரான்ஸிஸ் குணரட்ணம் (வயது- 40) என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இவர் வெளியே சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் அவரது வீட்டிற்கு அருகே வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். மேலும் இதே பகுதியில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் நேற்று மதியம் 1.20 மணியளவில் அடையாளம் தெரியாதவர்களினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். அன்னை வேளாங்கன்னி வீதி பாலையூற்று என்ற இடத்தில் 60 ஆம் இலக்க வீட்டிற்கு முன்னால் சுட்டுக்கொல்லப்பட்டவர் 40 வயதுடைய அமரபால எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சனாதிபதித்....

இவ்வாறு தமிழ்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுவின் தலைவர் இரா. சம்பந்தன் நேற்று புதன்கிழமை பிற்பகல் வெளியிட்ட பத்திரிகை அறிக்கையில் தெரிவித்திருக்கின்றார். பத்திரிகை அறிக்கை வருமாறு:-

வடக்குக்கிழக்கில் சனாதிபதித் தேர்தல் தொடர்பாக தமிழ் மக்களின் நிலைப்பாடு குறித்து ஊடகங்களில் வெளியாகியுள்ள முரண்பாடான அறிக்கைகள் எமது கவனத்துக்குக்கொண்டுவரப்பட்டன. நவம்பர் பத்தாம் திகதி கிளிநொச்சியில் விடுதலைப்புலிகள் இயக்கத்துடனான சந்திப்பின் பின்னர் அங்கு இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் நிலைப்பாடு பற்றித்தெளிவாக கூறியிருந்தது.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தொடர்பாக நவம்பர் பத்து ஊடகவியலாளர் சந்திப்பில் முற்றும் தெளிவாக வெளியிடப்பட்ட அந்த நிலைப்பாட்டில் எந்த வித மாற்றமும் இல்லை இவ்வாறு பாராளுமன்றக் குழுவின் தலைவர் சம்பந்தன் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

### பேரினவாதத்தின்....

லண்டன் பி.பி.சியின் தமிழோசை இலங்கை சனாதிபதித் தேர்தலில் மக்கள் அக்கறை காட்டவேண்டிய அவசியமில்லை என விடுதலைப் புலிகள் எடுத்த நிலைப்பாட்டிற்கான காரணம் பற்றி அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறுகையில்; இடைக்காலத்தில் எங்களுடைய மக்கள் மீது யுத்தம் உக்கிரமாக ஏவிவிடப்பட்ட பொழுது தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வைக் கொண்டு வருவோம். யுத்தத்தை நிறுத்தி தமிழ் மக்களுக்குள்ள நெருக்குவாரங்களை நீக்கி தமிழ் மக்களினுடைய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு தீர்வைக் கொண்டு வருவோம் என்கின்ற கோசங்களை முன்வைத்து சில தலைவர்கள் தேர்தலில் நின்ற பொழுது எங்களுடைய மக்களின் சிறுதொகையானோர் நம்பிக்கை அடைந்த சூழலும் இருந்தது. தொடர்ச்சியாக மாறிமாறி வந்த சிங்கள இனவாதத் தலைமை எங்களால் இன்றும் இன்னும் அழிவையும் அவலத்தையும் ஏற்படுத்தினார்களே அன்றி எங்கள் மக்களுக்குத் தீர்வை முன்வைப்பதில் எந்தவித அர்ப் பணிப்புடனும் செயற்படவில்லை. மக்களை ஏமாற்றுகின்ற இழுத்தடிப்பைச் செய்தார்கள். தேர்தலில் நிற்கின்ற பொழுது மட்டும் கோசங் களாக முன்வைக்கப்பட்டன. ஆட்சிக்கு வந்தவுடன் அவர்கள் தங்களுடைய சிங்களப் பேரினவாத சிந்தனைகளை அமுல்படுத்துகின்ற தலைவர்களாக மாறி இருக்கின்றார்கள். அந்த அடிப்படையில் இந்தத் தேர்தல் சிறிலங்காவிற்கான - சிங்கள மக்களுக்கான தேர்தலாக தான் தமிழ்மக்கள் உணர் கின்றார்கள்.

இதேவேளை, இம்முறை இதில் இன்னும் வலுவாக உள்ளார்கள். ஏனெனில், ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்திலும் சரி, சந்திரிகா அம்மையாருடைய ஆட்சிக் காலத்திலும் சரி எங்களுடைய மக்களின் வாழ்க்கை நிலையில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. இரண்டு தலைவர்களும் தங்களுக்கான சந்தர்ப்பம் இருந்த காலப் பகுதியிலும் தமிழ்மக்கள் உதாசீனப்படுத்தப்பட்டுள்ளனர். அந்த வகையில் எங்கள் மக்களினுடைய ஒட்டுமொத்த வெறுப்பின் வெளிப்பாடுதான்- இந்த நிலையை எங்களுடைய மக்களோ நாங்களோ எடுக்க வேண்டிய சந்தர்ப்பத்தை உருவாக்கியுள்ளது என்றார்.

வடக்கு-கிழக்குப் பகுதியில் உள்ள மக்களை தேர்தலில் அதிகம் அலட்டிக்கொள்ள வேண்டாமென சொல்வது ஒருவகையில் தேர்தல் புறக்கணிப்புத்தானே எனக் கேட்ட போது,

எங்களைப் பொறுத்த வரையில் நாங்கள் இந்த நிலைப்பாட்டை முதலில் வைக்கவில்லை. மக்களினுடைய மன நிலையை நன்கு அறிந்த பின்புதான் எங்களுடைய கருத்தை அண்மையில் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து மக்களினுடைய மனோநிலை வெளிப்பாடுகளை நேரடி நேரமாக ஆய்வு செய்து எங்களினுடைய அவதானிப்பின் வெளிப்பாடாகத்தான் எங்களுடைய தலைமைப்பீடம் ஒரு தெளிவான நிலைப்பாட்டை எடுத்தது. கடந்த காலப் பட்டறிவை வைத்துக்கொண்டு எங்களுடைய மக்கள் இப்படியான ஒரு தீர்மானத்தை எடுத்தனர்.

எங்களைப் பொறுத்த வரை எங்களுடைய தலைவர் ஒவ்வொரு மாவீரர் தினத்தின்போது மேற்கொள்ளும் கொள்கைப் பிரகடன உரையின்போது மிகத் தெளிவாகச் சொல்லி வந்திருக்கிறார்.

நாங்கள், மாற்றுத் தீர்வை சிறிலங்கா முன்வைக்கின்றபொழுது அதைப் பரிசீலிக்கத் தயாராக இருக்கின்றோம். அவர்கள் வைக்கின்ற தீர்வின் அடிப்படையில்தான் எங்களுடைய பரிசீலனை இருக்கும்.

சமஷ்டி ஆட்சிபற்றி தமிழ்ச்செல்வன் அவர்களிடம் கேட்டபோது,

சமஷ்டி ஆட்சியைப் பற்றி பேச முடியாதவர்களாக இருக்கின்றோம். சிறிலங்கா அரசு இன்றும் ஒற்றை ஆட்சி என்ற ஒரு இறுக்கமான அரசியல் அமைப்பை - ஆட்சிமுறையை வைத்துக் கொண்டு சமஷ்டியைப் பற்றி சிறிலங்கா அரசு பேசுவது போலித்தனமானது.

இலங்கை அரசாங்கம் ஒற்றை ஆட்சி என்கின்ற அரசியல் அமைப்பு முறையை மாற்றி அமைத்து அரசியல் தீர்வு ஒன்றை முன்னெடுக்கக்கூடிய சூழலை அவர்கள் உருவாக்கிக் கொள்கின்ற பொழுது தான் நாங்கள் எங்களுடைய இறுதித் தீர்வு பற்றிய தெளிவான நிலைப்பாட்டை எங்களுடைய தலைமை வெளிப்படுத்துமென நாங்கள் நினைக்கின்றோம் என்றார் அவர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.